விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஆவணி 29 ஜுலைகஃ 25 இதழ் 213

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14—9—82

பனகொடை இராணுவ முகாமில்

## உண்ணாவிரதத்தை தமிழ் இளைஞர்கள் கைவிட்டனர்!

(கொழும்பு)

பனகொடை இராணுவ முகாமில் கடந்த நான்கு நாட்களாக உண்ணாவிரதமிருந்த தமிழ் இளைஞர்கள் கோரிக்கைகள் வழங்கப்பட்டதை அடுத்து தமது உண்ணாவிரதத்தை நேற்று மாலை கைவிட்டனர்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இந்த இளைஞர்கள் கடந்த வியாழக்கிழமை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். உண்ணாவிரதம் ஆரம்பித்தவர்களில் 14 பேர் கடந்த சனிக்கிழமை வைத்திய ஆலோசனையை அடுத்து உண்ணாவிரதத்தை கைவிட்டனர் ஆனால் 13 பேர் உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர். இவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மாலை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி இளைஞர்களைச் சந்தித்து, அவர்களின் முக்கியகோரிக்கைகளைத் தாமதமாக உறுதியளித்தார். இதனையடுத்து, எலுமிச்சப்பழச் சாற்றை அருந்தி இளைஞர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

### வழங்கப்பட்ட கோரிக்கை

சிறை கூடத்திலுள்ள பைப்பில் தினசரி குளிப்பதற்கு

[8ம் பக்கம் பார்க்க]

# குட்டிமணிக்கு எம். பி. பதவி: தமிழர் கூட்டணி பரிசீலனை!

## அமிர்தலிங்கம் அறிக்கை

(ஏ. வி. மாணிக்கம்)

“குட்டிமணியை வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கவேண்டுமென இளைஞர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை இப்போது கூட்டணியின் பரிசீலனையில் உள்ளது. இக்கோரிக்கைகளின் மீது நாம் நிதானமாக ஆலோசித்து, சிறையிலிருக்கும் இளைஞர்களின் நலன்களை மனதில் கொண்டு ஒரு முடிவை எடுப்போம்” என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகமும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அரசியல் சலசலப்புக்காட்டாமல். பக்குவமாக அணுகித் தீர்க்கவேண்டிய பிரச்னைகளை எமது நிதானமற்ற செயல்கள்மூலம் சிக்கலாக்கிவிடக்கூடாது என்றும் திரு. அமிர்தலிங்கம் எச்சரிக்கைவிட்டுள்ளார்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணியை ஜனாதிபதித்தேர்தலில் நிறுத்துவது சம்பந்தமாக இவ்வறிக்கை அமைந்துள்ளது. இவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

“குட்டிமணியை ஜனாதிபதித்தேர்தலில் நிறுத்தும் பிரசனை சென்ற வாரம் பத்திரிகைகளில் வெளிவந்தது. இந்தக் கோரிக்கை நான்கு வாரங்களுக்கு முன்பாக குட்டிமணி மீது தீர்ப்பு வழங்கப்பட்ட நேரத்தில் சட்டத்தரணிகள் கரிகாலன், ஆர். டி. இரத்தினசிங்கம் உட்பட பல இளைஞர்களால் கூட்டணித்தலைவர் திரு. சிவசிதம்பரத்திடமும் என்னிடமும் விடுக்கப்பட்டது. இக்கோரிக்கையினால் ஏற்படும் அரசியல் விளைவுகளைப்பற்றி நாம் ஆராய்ந்துகொண்டிருந்த வேளையில் சட்டப்பிரச்னைகளைப்பற்றி சட்ட அறிஞர் திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகத்திடம் ஆலோசனை பெறுமாறு திரு. கரிகாலன் பணிக்கப்பட்டார். இதற்கமைய திரு. கரிகாலன் திரு. புள்நாயகத்திடம் ஆலோசனை கேட்டுள்ளார். இக்கோரிக்கை மீது நாம் எடுக்கும் முடிவு மரண தண்டனைக்குள்ளாகி இருக்கும் குட்டிமணி, ஜெகன் ஆகியோரை மட்டுமல்ல இராணுவமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எல்லா இளைஞர்களின் நலன்களையும் பாதிக்குமாகையாலும் துன்பங்களை அனுபவித்துவரும் அந்த இளைஞர்களை அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக்க நாம் விரும்பாமையாலும் இக்கோரிக்கை மீதானஎமதுமுயற்சிகளை பகிரங்கப்படுத்தக் கூடாதென சம்பந்தப்பட்ட சகலரையும் கேட்டுக்கொண்டோம். சிறையில் இருக்கும் குட்டிமணி ஜெகன் உட்பட அனைவரும் நிலைமையைப் புரிந்து கொண்டு நிதானமாக செயல்பட்டனர்' எனினும்

(8-ம் பக்கம் பார்க்க

யாழ். மாவட்டசபை:

## தேர்தல் வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

[கொழும்பு]

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல் முடிவை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 'ரிட்' மனுவின் மீதான தீர்ப்பு இம் மாதம் 30 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான திரு. ஓ எஸ். எம். செனவிரத்ன, திரு. ஜே எஸ். அபேவர்த்தன ஆகியோரே தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தனர்.

நல்லூரைச்சேர்ந்த சட்டத்தரணி தங்கராஜா இராஜஇராஜேஸ்வரன் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் பிரதிவாதிகளாக 19பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்,

தேர்தல் ஆணையாளர் யாழ் மாவட்டசபைதலைவர் உட்பட உறுப்பினர்கள் பத்துப்பேர் எதிர்க்கட்சித்தலைவர், அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் பொதுச்செயலாளர், ஐ தே க. பொதுச்செயலாளர் யாழ். மாவட்ட அபிவிருத்திசபை ஐ, தே க. சுயேச்சை வேட்பாளர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாவர். [வெ]

## “தமிழ் ஈழம் பற்றிச் சிந்தனை; அதே நேரம் ஜே. ஆருடன் ஆலோசனை!”

### தமிழர் கூட்டணிபற்றி வாசுதேவ

(யாழ்ப்பாணம்)

“தமிழர்விடுதலைக்கூட்டணி தலைவர்கள் தமிழ் ஈழத்தைப் பற்றிச் சிந்திக்கின்றனர் அதே வேளை ஜனாதிபதி ஜே ஆருடனும், அமைச்சர் சிறில்மத்யூவுடனும் ஆலோசனை நடாத்துகின்றனர்” என்று நவசமசமாஜக்கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார பத்திரிகையாளர் மகாநாட்டில் நிருபர் ஒருவரின் கேள்விக்குப்பதிலளிக்கையில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலயத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

இம்மகாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு, யாழ். மாவட்டச்செயலாளர் திரு. ஆ. சு. அண்ணாமலை, மற்றும் சட்சி உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

“பாதுகாப்பு அமைச்சர் மூலம் இப்பகுதியை பாதுகாக்க முடியாது; ஊர்காவல்படைகள் அமைப்பதன்மூலம்தான் பாதுகாப்பாக வாழமுடியும். ஊர்காவல்படைகளுக்கு இப்

[8ம் பக்கம் பார்க்க]

நாளை குதூகல திறப்புவிழா

ஹோட்டல் றெலெக்ஸ்

15-09-82 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆரம்பித்துவைப்பார்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

யாழ்நகரில் நவீன வசதிகள் கூடிய ஒரே ஒரு ஸ்தாபனம்

ஹோட்டல் றெலெக்ஸ்

340, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்.

4518

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற C 90, C 70. C 50, CD 125 மோட்டார் சைக்கிள்களும் Delica 1979 மொடல் வானும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்த விதமான வாகனமும் குறைந்த விலையில் நேரடியாகத் தருவித்துக் கொடுக்கிறோம். நா சாம் பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4453

அரியாலை யூதா ஆலய சந்தியில் கண்டி வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ½வாசி பிரித்துக் கொடுக்கப்படும். ச. துரைத்தினம், 50 பாரதி வீதி, கச்சேரியடி. 4512

## தேவை

பஸ் லைசென்ஸ்சும் மோட்டார் சைக்கிள் லைசென்சும் உடையவரும் கடைவேலைகள் செய்யக்கூடியவரும் தேவை 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க. விளம்பர இல. 4508, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 4508

## பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல் செய்முறை அறிமுறையுட்பட 19 – 9 – 82 இல் ஆரம்பம். C E T, ஐலண்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைச்கு எதிரில்) 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4495


# வெற்றுப் பரல்கள் திருட்டு

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டப் பெருந்தெருக்கள் திணைக்களத்தின் துணுக்காய் டிப்போவில் 26வெற்றுப் பரல்கள் திருட்டுப் போயுள்ளதாம் இது தொடர்பாக மாங்குளம் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. [க]

# புத்தூரில் பகிரங்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'தாழ்த்தப்பட்ட மக்களின் இன்றைய நிலையும் எதிர்காலமும்' என்ற தலைப்பிலான பகிரங்க கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை புத்தூரில் நடைபெறவுள்ளது

புத்தூர்மேற்கு கலைமதி ச. ச. நிலைய முன்றலில் திரு. கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திருவாளர்கள் கே செந்திவேல், என் இரவீந்திரன், வை. வன்னியசிங்கம், சோ. தேவராஜா, ந. செல்வராசா, க. சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றுவார். (அ)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் திருநெல்வேலி இடவளவில் அமைந்துள்ள சிற்றுண்டிச் சாலையை நடாத்துவதற்காக, இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரினால் 1982–09–30ஆம் திகதி நண்பகல் 12–00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் இப் பல்கலைக் கழகத்தின் நலச்சேவைகள் கிளையிலிருந்து மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணமாக 100/– ரூபாவும், மீளளிக்கப்படாத கட்டணமாக 25/– ரூபாவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களைக் காரியாலய நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்,

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1982–09–11. 4513

# துணுக்காய் கூட்டுறவுக் கருத்தரங்கு

(துணுக்காய்)

துணுக்காய் பகுதிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு இம் மாதம் 16ம் தேதி துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கை முல்லைத்தீவு மாவட்ட ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவு சபையினரும், முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு திணைக்களத்தினரும் ஒன்று சேர்ந்து நடாத்துகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளர் திரு. நா. கந்தையா. கூட்டுறவுக் கல்வி விஸ்தரிப்பு அதிகாரி திரு. க. சபாரத்தினம், வவுனியா கூட்டுறவுக் கல்லூரி அதிபர் திரு. சி. செல்லத்துரை. துணுக்காய் ப. நோ. கூ. ச தலைவர் திரு. ஆ. மா. பூபாலசிங்கம் ஆகியோர் கருத்துரை வழங்குவார்கள்.

# பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காரைநகர் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுமுகம் சண்முகம் சங்கரப்பிள்ளை கைம்பெண் வள்ளியம்மையின் மரணசாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

வழ. இல: தத்துவம் / 3678

சண்முகம் சங்கரப்பிள்ளை இராஜரட்ணம், பாலாவோடை, காரைநகர்.

மனுதார்

இந் நீதிமன்றத்தில் மேற்குறித்த இலக்கங்கொண்ட மரணச்சொத்து நிர்வாகத் தத்துவ வழக்கு மேற்சொல்லப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமற்ற சொத்துக்களுக்கு நிர்வாகத தத்துவப் பத்திரம் பெற மேற்குறித்த மனுதாரால் தாக்கல் செய்யப்பட்டு அதற்கான பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982ம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் பூரண கட்டளையாக்சப் படலாகாதென்பதற்குச் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறுர்.

1982ம் ஆண்டு ஆனி மாதம் 23ம் திகதி.

மன்றின் கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
அ. மரியாம்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.
4468

# இவர்கள் தெரிவு

(புலோலி)

பருத்தித்துறை – புலோலி தெற்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் 10–வது ஆண்டு விழாவையொட்டி தவறணை ரீதியில் 15 தரமான சங்கத்தவர்களும் சங்க ஊழியர்களில் 6சிறந்த ஊழியர்களும் தெரிவு செய்யப்பட்டனர் தவறணை ரீதியில் தரமான அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:

சி ஈஸ்வரன்(மந்திகை), வ பூபாலசிங்கம் (கெருடாவில்) வீ. சின்னராசா(பொலிகண்டி) க. நாராயணன் (துன்னாலை வடக்கு–1], மா. பரஞ்சோதி (அல்வாய் மேற்கு], க. நவரத்தினராசா அல்வாய் வடக்கு–1) ந.தர்மபாலன் (அல்வாய் வடக்கு–2] கி பொன்னையா. ஆ. பிள்ளைநாயகம், (புலோலி கிழக்கு ,வி வேலுப்பிள்ளை வராத்துப்பளை], மா மகாலிங்கம் குடத்தனை [மணற்காடு], வே. பரஞ்சோதி (அம்பன்), இ. இராசேந்திரம்(நாகர்கோவில்) கா. சிவஞானசுந்தரம் (புலோலி மேற்கு), வீ ஜெயராசா [பன்னாலை வடக்கு].

சங்க ஊழியர்களில் சிறந்த ஊழியர்களாகத் தெரிவுசெய்யப்பட்டோர்: கி. பாலசிங்கம், த. ஐயாத்துரை, பொ. நல்லதம்பி, க. சீனித்தம்பி, கி. தர்மலிங்கம், பொ. திருப்பதி. இவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (அ)

# ஆண்டு விழா

(பண்டத்தரிப்பு

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் 10வது ஆண்டுநிறைவு விழா இம்மாதம் 17ம், 18–ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

மன்றத்தலைவர் திரு. த தவராசா தலைமையில் நடைபெற பெறவுள்ள இவ் விழாவில் விவாதஅரங்கு, கவியரங்கு ஆகியனவும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ செந்தில்வடிவேல் பிரதம அதிதியாக இவ் விழாவில் கலந்துகொள்வார். நாடக அரங்கக் கல்லூரி இயக்குனர் திரு. குழந்தை சண்முகலிங்கம், சட்டத்தரணி சோ.தேவராஜா ஆகியோர் உட்படபலர் உரையாற்றுவார்கள். (இ)

# கிளைக்குழுத் தேர்தல்கள்

(மன்னர்)

மன்னர் பலநோ. கூ. சங்கத்தின் கிளைகளுக்கான குழுத் தேர்தல்கள் நவம்பர் மாதம் 10–ம் திகதி நடைபெறும்.

இக்கிளைகளுக்கான குழுத் தேர்தல்கள் உப்புக்குளம், மூர்வீதி, கரிசல், பேசாலை. தாழ்வுபாடு, எருக்கலம்பிட்டி, தாராபுரம், புதுக்குடியிருப்பு, தலைமன்னர், பள்ளிமுனை, பனங்கட்டி, கொட்டு ஆகிய கிளைகளில் நடைபெறும்.

இத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நவம்பர் 3–ம் திகதி ஒவ்வொரு கிளைகளிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்தேர்தல்கள் மூலம் ஒவ்வொரு கிளைகளுக்கும் தலா 9 பேர் கொண்ட உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள்.

# 3 திட்டங்கள் பூர்த்தி

(மன்னர்)

மன்னர் மாவட்ட தேசிய இளைஞர் மன்றத்தினல் மன்னர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய சேவைத் திட்டங்களில் 3 திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இத்திட்டத்தின் மூலம் வஞ்சியன்குளம், இது மாலதாழ்வு கள்ளிகட்டைக்காடு ஆகிய கிராமங்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கக்கூடிய வாய்க்கால்கள் அமைக்கப்பட்டன. (க)

# வேலணை ப.நோ.கூ.சங்க புதிய கிளை

(வேலணை)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வேலணை–(அம்பிகை நகர்) பகுதி மக்களின் நன்மை கருதி புதிய கிளை ஒன்றை யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு ச ஞானப்பிரகாசம் திறந்து வைத்நார்

பின் சங்கத் தலைவர் திரு. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வைத்திய கலாநிதி ஐ. கந்தையா, ஊர்காவற்றுறை மக்கள் வங்கி கிளை முகாமையாளர் திரு. எஸ். புவனேஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். செல்வரத்தினம், ப நோ. கூ. சங்க முகாமையாளர் செல்வி எஸ்.சோமசேகரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# சேவைநலம் பாராட்டு

[கிளிநொச்சி

'கடந்த 35 ஆண்டுகளாக அரச சேவைக்குத்தம்மை அர்ப்பணித்துச் சிறப்பாகப் பணிபுரிந்த நீதிமன்றப் பதிவாளர் திரு நடராசாவின் சேவையை நாம் என்றும் மறந்துவிடமுடியாது' என்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதிவாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு. எஸ். நடராசாவின் சேவைநலம் பாராட்டுவிழாவுக்குத்தலைமை வகித்து உரையாற்றுகையில் நீதவான் திரு. வீ. ஜெகசோதி குறிப்பிட்டார்.

சட்டத்தரணிகள் உட்படப் பெருந்தொகையானேர் கலந்துகொண்ட இவ்வைபவத்தில் சட்டத்தரணிகள் என். ஸ்ரீபதி, வெற்றிவேல், நீதிமன்ற முதலியார் திரு பௌாசி உட்படப் வேறு பலரும் உரையாற்றினர்கள். [அ]

# ச. ச. நிலைய இல்லப் போட்டி முடிவு

(வேலணை

வேலணை மேறகு ஸ்ரீமுருகன் சன சமூகநிலையத்தின வெள்ளி விழாவும், வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளும், வெள்ளி விழா ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியும் நிலைய மைதானத்தில் ஆசிரியர் திரு. பொ. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றன.

இவ்விழாவில் காவலூர் பா. உ. பண்டிதர் க. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசுகளை வழங்கினர்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் முறையே 'ரோகினி இல்லம்', 'சல்லியூட் இல்லம்' 'அப்பலோ இல்லம' முதலாம், இரண்டாம், மூன்ரும இடங்களைப் பெற்றுககொண்டன.

# சென்ஜோன்ஸ் பரிசளிப்பு விழா

(அரியாலை)

யாழ். பரியோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 17ம் திகதி வெள்ளிக்கிழமை பீற்றேஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரி முகாமையாளரும் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனுமாகிய அருட் திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திரு. ஸி. ஈ ஆனந்தராஜன் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பார் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி ஏ. வி ஏ. வேதநாயகம் கலந்து கொள்கிறார். பரிசில்களை திருமதி பத்மினி வேதநாயகம் வழங்குவார். (அ)


# யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பு

குறைந்தது ஒரு வருடத்திற்கு முந்தியிருந்தாயினும் மோட்டார் சைக்கிள் ஒட்டும் லைசென்ஸ் வைத்திருப்போருக்கு வாரமொன்றுக்கு ஐநூறு ரூபாயளவில் ஊதியம் பெற வாய்ப்புண்டு தெரிவு செய்யப்படுவோர், ஆயிரம் ரூபாய் பிணைப்பணம் கட்டுதல் வேண்டும். தகுந்த நற்சாட்சிப்பத்திரங்கள் அவசியம். லைசென்ஸ் எண் உட்பட முழு விபரங்களுடனும், இரண்டு புகைப்படங்களுடனும் இம்மாதம் 22ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிககவும:

விளம்பர இல: 4514,
மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம்.
4514

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

# COMPUTER PROGRAMMING COURSE - 2

Commencing on Saturday 18th September 1982

Languages Taught:- Basic and Cobol.

CONTACT

REGISTRAR,

Patrician Institute

59, ST. PATRICK'S ROAD, JAFFNA. (4510)

# ★ டென்மார்க்கில் பெரும் இராணுவ ஒத்திகை

# 250 போர் விமானங்கள், 160 போர்க்கப்பல்கள்

# கலந்து கொள்கின்றன!

## 5000 அமெரிக்க வீரரும் பங்குபற்றுவர்

லண்டன், செப். 13

டென்மார்க்கில் நேட்டோ நாடுகளின் இராணுவஒத்திகைகள் ஆரம்பமாகியுள்ளன. அமெரிக்கா தனது 5000 கடற்படை வீரர்களை இவ் ஒத்திகையில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைத்துள்ளது.

160 க்கு மேற்பட்ட நவீன யுத்தக்கப்பல்களும், 250 க்கு மேற்பட்ட யுத்த விமானங்களும் இந்த ஒத்திகையில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

போர்க்கப்பல்களைத் தாக்க வரும் நவீன விமானங்களை எவ்வாறு சமாளிப்பது என்பது பற்றியும், புதிய கடற்படை யுத்த, விமான யுத்த உத்திகள் பற்றி பரிசீலனைகளை மேற்கொள்வதாக டென்மார்க் ஒத்திகைகள் விளங்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டென்மார்க் இராணுவ ஒத்திகையின் முக்கிய நோக்கம் வார்ஸோ உடன்படிக்கை நாடுகள் இராணுவ ரீதியிலான நடவடிக்கைகளில் இறங்கும் பட்சத்தில் அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## சூரிச்சில் ரயில்-பஸ் மோதல் 39 பேர் பலி

சூரிச் செப். 13

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரிலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ரயில் கடவையொன்றில் ஏற்பட்ட ரயில் பஸ் வண்டி மோதலில் 39பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து உல்லாசப் பயணம் மேற்கொண்டு சுவிற்சலார்து வந்தவர்களே இந்த விபத்தில் சிக்கிக்கொண்டனர். (கி)

## மத்திய அவுஸ்திரேலியாவில்

## 4 நாவல்களையும், இரு திரைப்படக் கதைகளையும் தந்த வழக்கு !

கன்பரா, செப் 13

மத்திய அவுஸ்திரேலியாவிலுள்ள முகாமொன்றில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் மரணமான ஒன்பது வார சிசுவொன்றின் மரண விசாரணை வழக்கு அவுஸ்திரேலியாவில் தற்போது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வழக்கில லிண்டி சாம்பலின் என்ற மரணமான சிசுவின் தாய்மீது கொலைக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் மத்திய அவுஸ்திரேலியாவிலுள்ள முகாமொன்றில் லிண்டி சாம்பலின் தமது கணவரான மைக்கல் சாம்பலினுடனும் தமது ஒன்பது வார குழந்தையுடனும் வசித்துவந்தார். ஒருநாள் இக்குழந்தை மர்மமான முறையில் காணமல்போய்விட்டது. பின்னர் தேடுதல்மேற்கொண்ட போது இவர்கள் தங்கியிருந்த முகாமுக்கருகில் இக்குழந்தையின் உயிரற்ற உடல் பலத்த காயங்களுடன்கண்டுபிடிக்கப்பட்டது. அதனருகே நாயொன்று இருக்கக் காணப்பட்டது.

சடலத்தின் அருகிலிருந்த நாயே குழந்தையைக் கொன்றிருக்கலாமெனலாம் லிண்டி சாம்பலின் தெரிவித்தார். ஆனால் சட்டவைத்திய பரிசோதனைகள் குழந்தையின் மரணத்தில் அதன் தாயான லிண்டி சாம்பலினுக்கும் தொடர்பிருப்பதாக வெளிக்காட்டின. இதனையடுத்து பொலிசார் இவர்மீது கொலைக்குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவில் பெரும் பரபரப்பையூட்டி

(6ம் பக்கம் பார்க்க)

## மே.ஜெர்மன்பொருளாதாரம் அமைச்சர் பகிரங்க கண்டிப்பு

லண்டன், செப்.13

மேற்கு ஜெர்மன் பொருளாதாரத் துறை அமைச்சரான திரு. ஒட்டோ லான்ஸ்டோ, மேற்கு ஜெர்மன் பொருளாதார நிலைகுறித்து தமது கண்டனத்தை பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்

மேற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹெல்மட் ஸ்மித்துக்கு பொருளாதார நிலை குறித்து அறிக்கையொன்றை இவர் சமர்ப்பித்திருந்தார். அமைச்சரொருவர் இவ்வாறு நாட்டுத் தலைவருக்கு சமர்ப்பிக்கும் அறிக்கையில் தமது கண்டனத்தை தெரிவிக்கும் மரபு மேற்கு ஜெர்மனியில் இல்லை ஆனல் திரு. லான்ஸ்டோ இம்மரபினை மீறி தமது கண்டனத்தை பகிரங்கமாக இதில் வெளியிட்டுள்ளாரென்று தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார அமைச்சர் திரு. ஒட்டோ லான்ஸ்டோவின் இக்கண்டனத்தால் ஸ்மித் ஆத்திரமடைவாரென்றும், சில வேளைகளில் அமைச்சர் திரு. லான்ஸ்டோவைப் பதவி நீக்கம் செய்வாரென்றும் மேற்கு ஜெர்மன் அரசுயல் வட்டாரங்கள் ஊகம் தெரிவித்தன.

மேற்கு ஜெர்மனின் சுதந்திர ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த திரு. ஒட்டோ லான்ஸ்டோ அதிபர் திரு ஹெல்மட் ஸ்மித்தின் கூட்டரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றார். (கி)

## புனித மதீனு நகரில் ஈரானிய ஹஜ்ஜாஜிகள் ஆர்ப்பாட்டம்!

### சவுதியிலிருந்து 21 பேர் வெளியேற்றப்பட்டனர்

ரியாத், செப். 13

மெக்கா புனித நகரில் இருக்கும் 'மதீனு' வழிபாட்டு தலத்தில் ஆர்ப்பாட்டஞ் செய்ததாக இருபத்தியொரு ஈரானிய ஹஜ்ஜாஜிகள் சவுதி அரேபியாவிலிருந்தும் வெளியேற்றப்பட்டனர்,

கடந்த வெள்ளிக்கிழமையன்று இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈரானிய ஹஜ்ஜாஜிகள் 'மதீனு' ஸ்தலத்தில் அரசியல் கூட்டமொன்றை நடத்த முற்பட்டதுடன், ஈரானிய மதத்தலைவரான அயத் தொல்லா கொமெய்னியின் உருவப் படங்களையும் கைகளில் ஏந்திய வண்ணம் ஈரானிய மத அரசுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பினர். இவ் ஆர்ப்பாட்டக்காரரின் தலைவரான ஹஜ்ஜாஜி யொருவர் சவுதி அரேபிய அரசியல் வாதிகளுக்கு எதிராக ''வழிதவறி நடப்போர் குறித்து பிரார்த்தனை நடத்துங்கள்'' என்று ஏனையவர்களை நோக்கி கோஷமிட்டார்.

சவுதி அரேபியப் பொலிசார் 'மதீனு' வழிபாட்டுத் தலத்தில் இவ்வாறு ஈரானிய ஹஜ்ஜாஜிகள் ஆர்ப்பாட்டஞ் செய்ததையடுத்து அவர்களிடமிருந்த அயத் தொல்லா கொமெய்னியின் உருவப் படங்களைக் கைப்பற்றியதுடன், 21 பேரையும் சவுதியிலிருந்து வெளியேற்றும் நடவடிக்கைளில் இறங்கினர்.

சவுதி அரசாங்கம், தீவிரவாத ஈரானிய மத ஆட்சியாளரின் போக்குக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றது என்பதுகுறிப்பிடத்தக்கது. (கி)

## ஹிந்தி மொழியில் பாரதி பற்றிய நூல் வெளியீடு

புதுடில்லி, செப் 13

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பற்றிய நூல் ஒன்று ஹிந்தி மொழியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூலை மத்திய அரசின் பாதுகாப்பமைச்சர் திரு. வெங்கட்ராமன் நோற்றுமுன்தினம் வெளியிட்டு வைத்தார்.

புதுடில்லி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ரவிந்ரசேத் என்பவரே இந்த நூலின் ஆசிரியராவார்.

அமைச்சர் திரு. வெங்கட்ராமன் இந்த புத்தக வெளியீட்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறியதாவது: ''மகாகவி பாரதி இந்திய தேசியத்தின் தந்தையாக விளங்கினார். வளமிக்க தமிழ் இலக்கியங்களை மேலைத் தேசத்தவர்கள் அறியவேண்டுமென்பதில் அக்கறைகாட்டிய மகாகவி பாரதி, மேலைத்தேச இலக்கியங்களில் சிறந்தனவும் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டுமென்றுவிரும்பினார்'' என்றார். (கி)

## காஷ்மீர் அமைச்சரவைக்கு பதினெருபேர் புதிதாக நியமனம்!

ஸ்ரீநகர், செப் 13

ஜம்மு—காஷ்மீர் மாநில அமைச்சரவையில் பதினொரு பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதியமுதலமைச்சர் டாக்டர் பரூக் அப்துல்லா இந்த நியமனங்களைச் செய்துள்ளதுடன் புதியவர்களின் பெயர்ப்பட்டியலை காஷ்மீர் கவர்னருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

புதிதாக நியமிக்கப்பட்டவர்களில் 7 பேர் கபினட் அங்கத்தவர்களாயும், 4 பேர் ஸ்டேட் அங்கத்தவர்களாகவும் விளங்குவார்கள்.

நேற்றுமுன்தினம் ஜம்மு காஷ்மீரில் சர்வகட்சிகளது கூட்டமொன்றும் நிகழ்த்தப்பட்டது இக் கூட்டத்திற்கு முதலமைச்சரும், காலஞ்சென்ற காஷ்மீர் முதல்வர் ஷேக் முகமட் அப்துல்லாவின் மகனுமான ஜனுப் பரூக் அப்துல்லா தலைமைதாங்கினார். இதில் கலந்துகொண்ட பல்வேறுபட்ட கட்சியினரும் மறைந்த தலைவர் ஷேக் முகமட் அப்துல்லாவிற்கு அஞ்சலிசெய்து உரையாற்றினர். (கி)

சிரியாவின்

## மற்றுமொரு ஏவுகணை சாதனம் இஸ்ரேல் தகர்த்தெறிந்தது!

பெய்ரூட், செப். 13

பெய்ரூட் டமாஸ்கஸ் வீதியிலுள்ள சிரியாவின் ஏவுகணைகளைப் பிரயோகிக்கும் சாதனமொன்றை இஸ்ரேலிய இராணுவம் தாக்கியுள்ளது.

இந்த ஏவுகணைச் சாதனத்திலிருந்து விடப்பட்ட ஏவுகணையொன்று கடந்தவாரம் மூன்று இஸ்ரேலிய இராணுவ வீரர்களைக்கொன்றதாகவும் இதனையடுத்தே தாம் இதனைத் தாக்கும் நடவடிக்கையில் இறங்கியதாக இஸ்ரேலின் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த வாரமும் சிரியா லெபனுனுக்கு அமைத்துக் கொடுத்த, ஏவுகணைகளைப் பிரயோசிக்கும் புதிய சாதனத்தை இரண்டு இஸ்ரேலிய போர் விமானங்கள் தகர்த்தனவென்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க 'காஸா' பள்ளத் தாக்கு, ஜோர்தான் மேற்குக்கரை ஆகிய பகுதிகளில் இஸ்ரேல் தனது புதிய குடியேற்றங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது (கி)

## இந்திய ஜனுதிபதி கன்னியாகுமரி விஜயம்

சென்னை. செப். 13

பாரத ஜனுதிபதி திரு. ஸெயில் சிங் தமது கேரள விஜயத்தைமுடித்துக்கொண்டு நேற்றைய தினம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சென்றடைந்தார்

ஹெலிகாப்டர் விமானத்தில் வந்திறங்கிய ஜனுதிபதி ஸெயில் சிங்கை, தமிழகமாநில கவர்னர் திரு குரானு, சுகாதார அமைச்சர் திரு. எச். பி. ஹண்டே ஆகியோர் வரவேற்றனர்.

கன்னியா குமரி பகவத அம்மன் ஆலயத்துக்கு விஜயம் செய்த திரு. ஸெயில் சிங் அங்கு அரைமணித்தியாலயம் வழிபாட்டில் பங்குபற்றினர். இந்த ஆலய தர்மகர்த்தாவினர் பகவத அம்மனின் உருவப்படமொன்றினையும் சிற்ப வேலைப்பாடுடன்கூடிய தஞ்சாவூர்த் தட்டு ஒன்றினையும் ஜனுதிபதிக்கு அன்பளிப்பாக வழங்கினர். (கி)

## இந்திய வீரர் சாம்பியனுனர்

புதுடில்லி, செப். 13

இந்திய 'பட்மின்டன்' விளையாட்டு வீரரான பிரகாஷ் படுகோனே ஹொங்கெங்கில் நடைபெற்ற பட்மின்டன்ட் சுற்றுப்போட்டியில் சாம்பியன் பட்டத்தைப் பெற்றுள்ளார்

இவர் சீன வீரரொருவரையே இறுதிப்போட்டியில் எதிர்த்தாடினர் இப்போட்டியில் பிரகாஷ் மூன்று புள்ளிகளையும், சீன வீரர் 1 புள்ளியையும் பெற்றார்.

சாம்பியனுகத் தெரிவாகியுள்ள பிரகாஷ் படுகோனேக்கு 14 ஆயிரம் ஹொங்கங் டாலர்களும், இவருடன் மோதிய சீன வீரருக்கு 7 ஆயிரம் ஹொங்கங் டாலர்களும் வழங்கப்பட்டன. (கி)

## ''ஆசிரியன்''

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உத்தியோக பூர்வமான 'ஆசிரியன்'' பத்திரிகை அடுத்த வாரம் வெளிவரவுள்ளது. கால் ஆண்டு இதழான இப்பத்திரிகை சகல பாடசாலைகளுக்கும் இலவசமாக வழங்கப்படுமாம். (கெ)

### மணிவாக்கு

பூமியிலிருந்து ஆகாரம் உண்டாகும்படி, மிருகங்களுக்குப் புல்லையும், மனிதன் உழைப்புக்குப் பயிர் வகைகளையும் ஆண்டவன் முளைப்பிக்கிறார்.

— பைபிள்.

# நமது நோக்கு

## பிரசாரத்தின் விபரீதம்

அரசியல் வானில் மிகப் பிரசித்தி பெற்ற மூவர் ஒரே ஒரு விடயத்தை வற்புறுத்தி வருகின்றனர். இருந்தும் தங்களுக்குள் முரண்படுகின்றனர்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா தாம் மீண்டும் தேர்தலில் வெற்றிபெறுவிடின் 'நாட்டின் நிலைமையும் மக்கள் இறைமையும் அதோ கதி!' என்று எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

லங்கா சமசமாஜக் கட்சித்தலைவரும், முதுபெரும் அரசியல் வாதியுமான ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி, இந்த நாட்டின் ஜனநாயகத்துக்கு சாவுமணி அடிக்குமென்பதை பொதுக் கூட்டங்களில் தெளிவுபடுத்தி வருகிறார்.

தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் பெற்று இன்று செல்வாக்கு அதிகரித்தநிலையில் இயங்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நாட்டில் இன்று நடந்தேறிய, நடைபெறும் அக்கிரமங்கள் அனைத்தும் இன்றைய ஜனாதிபதிஅதிகாரத்தில் அமுலுக்கு வந்தஅநியாய சட்டங்களின் விளைவென்றும் நாட்டின் சுதந்திரத்தையும் மக்கள் இறைமையையும் பாதுகாக்க வெளிநாட்டு ஆதிக்கமும், வெளிநாட்டு நிறுவனங்களின் தலையீடும் தவிர்க்கப்படவேண்டுமென்று முழங்கி வருகின்றார்.

தேர்தல் ஆணையாளர் தீர்ப்பு திருமதி சிறிமாபண்டாரநாயக்காவின் பிரிவே உண்மையான சுதந்திரக் கட்சியென்பதால், மிக உற்சாகங்கொண்ட இக்கட்சிக்கு திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் பிரிவு தன் ஆதரவை உடனடியாகவே வழங்கியிருப்பது அரசியல் சின்னத்தனத்தின் மத்தியில் பெருந்தன்மையும் உண்டென்பதை புலப்படுத்துகின்றது. போட்டிக்குரிய பெருங் கட்சிகள் மீண்டும் மீண்டும் ஐ. தே. கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமாகக் காணப்படுகின்றன.

இடதுசாரிக் கட்சிகள் தம்முள் பிளவுபட்டிருக்குமளவில், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் வேட்பாளர் நியமனம் தேர்தல் ஆணையாளர் அங்கீகாரம் பெற்றிருந்தும் நாட்டில், பெருமளவு ஆதரவு பெறுமாவென்பது கேள்விக்குறி.

'மக்கள் இறைமை' ஆபத்துக்குள்ளானது. அதனைப் பாதுகாக்க வேண்டுமென்று போட்டியிடும் இம் மூன்று பெரும் கட்சிகள் மோதுவது மக்களுக்கே விபரீதம்போல் தோன்றும். ஆடுகள் நனைகின்றனவே என்று ஓநாய்க் கொண்டழுத கதை நினைவுக்கு வருகின்றது.

உண்மையில் ஒருகட்சியே ஈற்றில் மக்கள் ஆதரவைப் பெறமுடியும். அந்தத்தெளிவான நிலை உருவாகுவதையே நாம் பெரிதும் விரும்புகின்றோம்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒருபலமான நிலையில் இருப்பதனால், கருத்திலும்கொள்கையிலும் மாறுபட்ட மற்றைய இருகட்சிகளும் ஒரு வேட்பாளரை நிறுத்துவதே பொதுஜன ஆதரவை தெளிவாக அறியும் வழி. தேர்தல் பிரசாரம் இந்த நாட்டை இனி ஆட்சி செய்யும் அரசன் யாரென பாணியில் செல்வதாகவிருக்கின்றது. இதனை மாற்றுவது அவசியம்.

ஜனாதிபதியே நாட்டின் ''ராஜா'' என்ற கருத்தை ஒழிக்கவும், மக்கள் இறைமையை உண்மையில் பாதுகாக்கவும் வேண்டிய தேசபக்தி உண்டானால், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு பொது வேட்பாளரை நிறுத்தி பலத்த போட்டி உண்டாக்குவதே ஒரே ஒரு வழி. இவ்வாறு ஒன்றுபடுவதற்கு அதிக நேரம் தேவையில்லை.

இதற்கு எதிர்க் கட்சிகள். எதிர்க்கட்சித் தலைவர் எல்லோரும் ஒருங்கு சேர்வது, மிகமிக அவசியம். வெற்றி தோல்வி விடயமல்ல; ஆட்சிக்கு பலத்த எதிர்க்கட்சிதான் விடயம்.

## இ. தொ. காங்கிரஸ் எடுத்துள்ள முடிவு

மலையக தமிழ் மக்களின் சக்திமிக்க ஒரு ஸ்தாபனமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இருந்து வருவது உலகம் அறிந்த விடயம். இலங்கையின் மிகப்பெரிய தொழிற் சங்க ஸ்தாபனம் என்ற வகையில் அதற்கு உலகின் பல்வேறு தொழிற்சங்க இயக்கங்களோடு இணைப்புத் தொடர்புகள் உண்டு. ஐ நா வின் ஓர் அங்கமான சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்திலும் அதன் பல்வேறு கிளை நிறுவனங்களிலும் அது உறுப்புரிமை பெற்றுள்ளது.

இவ்வாறான் ஒரு நிலைமை அந்த ஸ்தாபனம்பெற்றிருப்பதற்கு பல காரணங்களைக் கூறலாம்.

தமது தலைவர்கள் மீதும், தமது இயக்கத்தின் மீதும் அம் மக்கள் பெரும் நம்பிக்கைவைத்திருக்கிறார்கள். அந்த நம்பிக்கை வீண் போகாதவாறு அத்தலைவர்களும், செயற்படுகின்றார்கள். தனிப்பட்ட சச்சரவுகளின் காரணமாக பிரிந்து சென்று வேறு இயக்கங்களில் சேர்ந்து கொள்ளும் தொழிலாளர்களும் கூட தேசிய மட்டத்திலான அரசியல் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டுத் துறைகளில் இந்த இயக்கமும் அதன் தலைவர்களும மேற்கொள்ளும் நிலைப்பாடுகளை ஏற்றுக் கொள்வதைக் காண்கின்றோம்.

இந்த நிலைமையில் இ. தொ. காங்கிரஸின் செயற்குழு எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவை ஆதரிப்பதென எடுத்துள்ள முடிவை அந்த மக்கள் எங்ஙனம் ஏற்றுக் கொள்வார்கள் என்று விவரிக்கத் தேவையில்லை

மலையக தமிழ் மக்களின் பிரச்னைகள் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் தமிழர்களின் பிரச்னைகளிலிருந்து பெரிதும் வேறுபட்டவை. தனித்தன்மைவாய்ந்தவை. அவைகளைத் தீர்த்துக் கொள்ள அவர்களின் தலைவர்கள் மேற்கொள்ளும் நிலைப்பாடுகள் சரியானவையாகவும் தீர்க்கதரிசனம்உள்ளனவாகவும் இருக்கவேண்டும், இல்லையெனில் இன்னும் பலசகாப் தங்களுக்கு அம்மக்கள் ஏனைய மக்களோடு சரிநிகர் சமானமாக தலைநிமிர்வது சாத்தியமற்றதாகிவிடும்.

---

ஜாம், பனாட்டு, குளிர்பானங்கள் செய்ய

# தெரிவுசெய்த மரங்களிருந்தே பனம்பழங்களைப் பெறவேண்டும்

தங்கள் 5-9-82 ஞாயிறு இதழில் 7ம் பக்கத்தில் 'கிராமம் தோறும் பனம்பழம் சேகரிப்பு! ப பொ. அபிவிருத்தி சபை துரிதம்' என்ற தலையங்கத்தின்கீழ் வெளியான செய்தியில் ஒரு முகாளிப் பனம்பழம் 30 சதமாக இச்சபை கொள்வனவு செய்துவருகிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பனம்பழங்களின் தன்மைகள் இனிப்பு, காறல், கசப்பு, துவர்ப்பு விகித சாறு விகிதம் போன்ற தன்மைகள். இயல்புகள், குணங்கள், மரத்துக்கு மரம், இடத்துக்கிடம், வேறுபடும். ஆகவே ஜாம், குளிர் பானங்கள், பிணாட்டு போன்ற உபஉணவுப் பொருட்கள் தயாரிக்க உபயோகிக்கப்படும் பனம்பழங்கள் தெரிவுசெய்யப்பட்ட பனைமரங்களிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்ட பனைமரங்களிலிருந்து மாத்திரம் தேர்ந்து எடுக்கப்பட்ட பனம்பழங்களிலிருந்தே பனம்பழச் சாறு(கழி எடுத்தல் அவசியம் இப்படியான நல்இயல்புகளைக் கொண்ட பனம்பழங்களுக்கு 30 அல்லது 50 சதமாவது கொடுத்து வாங்குவதில் லாபம் உண்டு. ஆனால் தாவர இரசாயன இயல்புகளின் அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்படாத பழங்களுக்கு பனம்பழம், யாழ் குடாநாடு எங்கும் சொரிகிற காலங்களில் விலைக்கு வாங்குவதால் பனம்பொருள் அபிவிருத்திச் சபைக்கும் வீணாகக் கெட்ட பெயர் ஏற்படுவதற்கு இடமுண்டு.

### மக்கள் கருத்து

ஆகவே பனம்பழங்கள் ப. பொ. ச. கொள்வனவு செய்யும் பழங்களின் தாவர இரசாயன நற்பண்புகளைக் கொண்ட பனைமரங்கள் பழம் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு அண்மையில் தெரிவுசெய்யப்பட்டு, தேர்வுசெய்யப்பட்ட மரங்கள் பதிவுசெய்யப்படவேண்டும். இவ்விதமான மரங்களிலிருந்து கொள்வனவு செய்யப்படும் மரங்களிலிருந்து விழும் பழங்களுக்கு பணம் கொடுப்பதில் பல நன்மைகள் உண்டு மேலும் இவ்விதமான பனம் பழங்களிலிருந்தெடுத்த விதைகளை நடுகைக்கு உபயோகிப்பதுதான் சபைக்கும், மக்களுக்கும், நுகர்வோர்க்கும் மேலும் நன்மைபயக்கும்.

இதுகால வரைக்கும் செய்து வந்த ஆராய்ச்சிகளால் பனம், ஜாம், பானங்களிலுள்ள காறல் கசப்பு பழ வாசனை போன்றவற்றை அகற்றமுடியாத நிலையும் இன்று ப. பொ. அ. சபையின் ஆராய்ச்சிகளுக்கு ஒரு சவால் என்று தான் கூறவேண்டும். ஆகவே நற்பண்புகள் உள்ள பனைமரங்களைப் பெறுவதற்கு தாய்மரங்கள் விவசாய தாவரவியல் வல்லுநர்களினால் தெரிவுசெய்யப்பட்டு பிற்சந்ததியினர்க்காவது உதவும் என்ற நோக்கில் பனைமரங்களில் புதுஇனங்களையும் கலப்பு பிறப்புகளையும் பிரத்தியேகமான இடத்தில் (வேறு பனைகள் இல்லாதஇடமாயிருத்தல்வேண்டும். அயல்மகரந்தச் சேர்க்கைகளைத் தவிர்க்கும் பொருட்டு) பனம் தோட்டம் அமைத்து கலப்பு பிறப்பினங்களை தோற்றுவிப்பது அவசியம். மேலும் குட்டையான கலப்பு பிறப்பினங்களையும் விருத்திசெய்ய ப. பொ. அ. சபை முன்வரவேண்டும் மேற்கூறப்பட்டமுறைகளில் தெரிவு செய்யப்பட்டமரங்களிலிருந்து பெறப்பட்ட பழங்களின் விதைகளையே தனியாரோ அல்லது பனம்பொருள் அபிவிருத்திச்சபையினரோ தத்தம் பனம்விதை நடுகைத் திட்டங்களின்கீழ் புதுஇடங்களில் நடுகைக்கு விநியோகித்தல் விரும்பத்தக்கது.

### சபையின் பணிகள்

ப பொ. அ ச. செய்யவேண்டிய பணிகள் ஏராளமிருந்தும் ப. பொ. அ. சபை ஆர்வமில்லாது, ஒரு குறிப்பிட்ட சில துறைகளையே மேலும் அபி

[5-ம் பக்கம்பார்க்க]

---

## சிறை அதிகாரிகளை பாராட்டுவோம்

யாழ் சிறைச்சாலையில் கைதியாகவுள்ள ஒருவரின் திருமணத்தை நடத்திவைத்த சிறை அதிகாரிகள் நமது பாராட்டு குரியவர்கள்.

சிறை அனுபவிக்கும் வில்பர்ட் தான் விரும்பியவளை கைப்பிடிக்க தேவையான பத்திரங்களில் கையெழுத்திட்டு சட்ட சம்பிரதாயங்களை நிறைவேற்றிய போதிலும், இன்னும் சிலகாலம் சிறையில் கழிக்கவேண்டியிருக்கிறது. அதேபோல் அவரது இளம் மனைவியும் கவலையுடனும் கண்ணீருடனும் வீடுதிரும்பியுள்ளார். இருவரும் ஒரே கூரையின் கீழ் ஒன்றுகூடும் காலம்வரும்வரை பிரிந்தே இருக்கவேண்டும். இது அந்த இளம் தம்பதிகளுக்கு மிகவும் வேதனையான விஷயமே.

திருமணத்தின் பின்னர் வில்பர்ட்டை பரோலில் விடுவிக்க சிறை அதிகாரிகள் ஏற்பாடு செய்ய முடியாமல் போனது கவலைக்குரியதே, திறந்தவெளி சிறைகளுக்குரிய குடிசைக் குடித்தன முறையை சிறை அதிகாரிகள் அமுல் நடத்துவதானால் ஒரு குறிப்பிட்டகாலத்துக்கு கைதிகள் தம்மனைவி மக்களுடன் வாழக்கூடிய சாத்தியம் ஏற்படும்.

சிறை அதிகாரிகள் தாம் மேற்கொண்ட நல்ல காரியத்துக்காகப் பெருமைப்படும் அதே சமயம் வில்பர்ட் நான்கு சுவர்களுடையில் மனைவியைப் பற்றி நினைந்து கவலையுறுவது நன்றாய் இருக்காது.

கே. தங்கராஜா,
(ஓய்வுபெற்ற சிறைஅதிகாரி),
கொக்குவில்.

---

## தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பினால் ஏற்பட்ட நன்மை

நமது நாட்டின் ஜனாதிபதி தேர்தல் அக்டோபர் மாதம் இருபதாம் திகதி நடைபெறவிருக்கும் இச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு பிரிவுகளில் எந்தப்பிரிவு உத்தியோக ரீதியிலான பிரிவு என்ற சர்ச்சைக்கு தேர்தல் ஆணையாளர் தீர்ப்புக் கிடைத்துவிட்டதால் வாக்காளர் மத்தியில் உற்சாகம் பிறந்துள்ளது.

ஒரு நாட்டில் ஜனநாயகம் தழைக்க வேண்டுமானால் அரசாங்கத்திற்கு பலமான எதிர்க்கட்சியிருக்கவேண்டியது இன்றியமையாதது. பழைய அரசியலமைப்புச் சட்டத்தை நீக்கி புதிய அரசியலமைப்புச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி விகிதாசாரத் தேர்தலை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தன முக்கியமான ஒரு கருத்தை தெளிவுபடுத்தி உரையாற்றினர்.

“அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்க பல நூறு வருடங்கள்சென்றாலும் முடியாது. ஏனெனில் இப்புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய நடைபெறும் விகிதாசாரத் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியுட்பட எந்தக்கட்சியும் அரசியலமைப்பை மாற்றத் தேவைப்படும் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெறமுடியாது. இக் கருத்தை அவர் கூறும்போது நாட்டில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் கட்டுப்பாடான பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விளங்கியது.

அதன் பிறகு அதிகாரப்தவி மோகமும் அக்கட்சியின் முக்கிய பிரமுகர்களிடையே தலைதூக்கியதினால் கட்சி இரண்டாகப் பிளவுபட்டு சிறமா அணியென்றும் மற்றையது மைத்திரி அணியென்றும் வேறுபட்டு, ஓர் அணியிலிருந்து ஒருசிலர் மறு அணிக்குத்தாவுவதும் ஓர் அணியை மறுஅணி தாக்கிப் பேசுவதும் தங்கள் அணிதான் உண்மையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியென்று ஒவ்வொரு அணியும் மாறி, மாறி கூட்டங்களை நடத்தித் தங்கள் ஆதரவாளர்களை திசைதெரியாத இருள் ஆழ்ந்த ஒரு பரிதாப நிலைக்குள் ஆக்கிஇட்டுக் கட்சியையே இல்லாமல் போகும் அளவுக்கு இரு அணிகளுமே முயற்சி செய்துவந்ததைக் கண்டோம்.

இந்நிலையில்தான் தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பு வெளிவாது இரு அணிகளுமே ஒன்றிணையக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதையிட்டு மக்கள் ஆறுதலடைவதில்

(5-ம் பக்கம் பார்க்க)

---

## கே. கே. எஸ். பஸ் பிரயாணம்

காங்கேசன் துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான பஸ் சேவை பிற்பகல் நேரங்கள் 3-45 க்கு பின்னர் மாலை 5 மணிக்கே நடைபெறுகிறது. இதனால் பல பிரயாணிகள் அவதிக்குள்ளாகின்றனர். குறிப்பாக காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை பருவகால சீட்டு பயணிகள் மற்றும் யாழ். பல் தொழில் நுட்ப பாடசாலையில் மாலை நேர பயிற்சி பெறுபவர்கள் யாழ் பெரியாஸ்பத்திரி, சினிமா போன்றவற்றுக்குப் போகிறவர்களுக்கும் குறித்த நேரத்தில் பிரயாணம் செய்ய முடியாது இருக்கின்றது, இதனை இ. போ. ச, மேலிடம் கவனிக்குமா?

சி பிரதாபன்,
யாழ்ப்பாணம்.

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "இதுவரை 11 தேர்தல்களில் போட்டியிட்டுள்ளேன் இதுஎனது கடைசித்தேர்தலாகஇருக்கலாம்"

-- ஜனாதிபதி ஜே. ஆர்.

[கொழும்பு]

"நான் இதுவரை பதினெரு பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டுள்ளேன். எதிர் வரும் ஜனாதிபதி தேர்தல் நான் போட்டியிடும் பன்னிரண்டாவது தேர்தலாகும். பதின்மூன்ருவது பொதுத் தேர்தலில் நான் போட்டியிடாமலிருக்கக் கூடுமென்று நினைக்கிறேன். ஏனெனில் தற்போதைய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அவ்வாறு என்ருல் போட்டியிடமுடியாது"

இவ்வாறு ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்தன மாத்தளை சங்கமித்த பாலிக மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மேலும் இக் கருத்தரங்கில் பேசுகையில் கூறியதாவது:

"மோதலில் இறங்கும் போது அவதானமாக இரு. இறங்கியபின்னர் உன்னுடன் மோதவிருப்பவனும் உனது நடவடிக்கைகள் குறித்து எச்சரிக்கையாகவே இருப்பான் என்பதற்கமைய நடந்து கொள்" என்று ஷேக்ஸ்பியர் கூறுகின்ருர்.

இதற்கமையவே நானும் எனது அமைச்சரவையினருடன் நன்கு ஆலோசித்தபின்னர் இவ்வாறு விரைவாக தேர்தல் ஒன்றில் குதிக்க முடிவுசெய்தேன். அத்துடன் இன்று நாட்டின் பொருளாதாரநிலைமை மிக நல்லநிலையில் இருக்கின்றது. எதிர்க்கட்சிகள் மத்தியிலும் பிளவுகள் தோன்றி அவை சீரற்றுக் காணப்படுகின்றன. ஆகையினுலேயே இத்தருணம் தேர்தல் ஒன்றை நடத்த சாதகமானது என்ற முடிவுக்கு நாம் வந்துள்ளோம்.

எனக்கு சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் ஏனைய கோள்களின் நிலை பற்றிக்கவலையில்லை, நாட்டு மக்கள் ஐ தே க.வில் நல்ல நம்பிக்கை வைத்துள்ளார்கள், ஆகையினுல் இத்தேர்தல்காலம் எனக்கு சாதகமாக விளங்குகின்றது.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எம்முடன் போட்டியிட்டாலும், அப்போட்டி மனிதன் ஒருவன் யானை ஒன்றுடன் மோதுவதாகவே இருக்கும். தற்போது எனது தேக நிலையும் சித்தமும் மிக நன்ருகவே இருக்கின்றன,

கலாநிதி கொல்வின் ஆர் டி. சில்வா தான் நேர்மை, கண்ணியம், திறமை புத்திசாதுரியமிக்கவரென்று கூறுகிருர். நானும் அவரைப் போலவே ஒருவன். உண்மையில் கலாநிதி கொல்வினுடன் மட்டுமே எனக்குப் போட்டியிருக்குமென்று நம்புகிறேன் என்ருர். (கி)

# ஜனாதிபதி ஜயவர்த்தன அக்.2-ல் மன்னாரில் தேர்தல்பிரசாரம்

(மன்னார்)

வடபகுதியில் முதல் முதலில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் மன்னார் – சிலாபத்துறையில் அடுத்த மாதம் 2-ந் திகதி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவினுல் ஆரம்பித்து வைக்கப்படும்.

மன்னார் மாவட்டத்திற்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி அடுத்த மாதம் 2-ந் திகதி காலை சிலாவத்துறைக்கு விஜயம் செய்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார்.

தொடர்ந்து எருக்சலம்பிட்டியில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் மன்னார் புதிய பஸ்நிலையத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் உரையாற்றுவார்.

மன்னார் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக்கொள்ளும் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தொடர்ந்து வவனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் தேர்தல் பிரசாரம் செய்வார்.

ஜனாதிபதியுடன் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுப் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார். (அ)

## "நிறைவேற்று அதிகாரம் கொண்டவரை ஒதுக்க நல்லதோர் சந்தர்ப்பம்"!

-- கொல்வின்

(கொழும்பு)

"ஜனாதிபதி தேர்தல் விரைவில் நடத்தப்படுவது மக்களுக்கு நன்மையளிப்பதாகவிருக்கின்றது. ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட தனி ஒருவரான ஜனாதிபதியை பதவியிலிருந்து அகற்றச் செய்யும் சந்தர்ப்பம் மக்களுக்கு விரைவாகக் கிடைக்கின்றது.

கலாநிதி கொல்வின் ஆர், டி. சில்வா சிலாபம் லக்ஷ்மி சினிமா கொட்டகை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மேலும் கூறியதாவது; "மக்களின் உரிமைகளைக் குறைவடையச் செய்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட தற்போதைய ஜனாதிபதியின் நிர்வாக அமைப்பை ஒழித்துக்கட்ட இத்தேர்தல் வழிவகுக்கின்றது. ஆகையினுல் சகல சக்திகளும் ஒன்றிணைந்து ஐ, தே. க. வை தோல்வியடையச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில், மக்கள் எதிர்காலத்தில் வாக்களிக்கும் உரிமையையும் பூரணமாக இழந்து விடுவார்கள் என்ருர். [கி]

## "துட்டகைமுனு மன்னன் எதிரிக்கு சமசந்தர்ப்பம் வழங்கியே மோதினுன்"

-- சிறிமா

[மஸ்கேலியா]

தற்போதைய ஜனாதிபதி தன்னை துட்டகைமுனு மன்னருடன் ஒப்பிடுகின்ருர். ஆனுல் அம் மன்னன் தன்னுடன் போராடிய எதிரிக்கு சமசந்தர்ப்பங்களை வழங்கினுன்"

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கினிகத்தேனயில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: தம் விருப்பப்படி அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்கு என்னை பொது மக்களிடமிருந்தும் அரசியலில இருந்தும் ஒதுக்கிவைப்பதே சிறந்ததென அரசாங்கக்கட்சியினர் உணர்ந்தனர். ஆகையினுலேயே அவர்கள் எனது குடியியல் உரிமைகளைப் பறித்துள்ளனர்.

இன்று மக்கள் ஐ. தே. க. அரசாங்கத்தின் போக்கில் விரக்தியடைந்துள்ளார்கள். அத்துடன் அரசாங்கம் மீள முடியாதகடன்சுமையை அவர்கள் மீது சுமத்தியுள்ளது. ஸ்ரீ ல. சு. கட்சி ஆட்சியில் எம்மால் வழங்கப்பட்ட சலுகைகளும், உரிமைகளும் படிப்படியாக வாபஸ்பெறப்பட்டுள்ளன,

இந்நிலையில் மக்கள் மீண்டும் தற்போதைய ஜனாதிபதியையே பதவியில் அமர்த்தி, ஐ. தே. க. அரசாங்கத்தை மீண்டும் தெரிவுசெய்தால், இன்று நிலவும் கஷ்டங்கள் மேலும் விகாரமடையும் என்ருர்.

இக்கூட்டத்தில்பேசிய திரு. அனுரா பண்டாரநாயக்கா, தமது கட்சிக்குள் எழுந்த பிரச்னைகள் விரைவில் தீர்க்கப்பட்டுவிடுமென்றும் மக்களுக்கு ஸ்ரீ ல சு கட்சிமீது நம்பிக்கை வைத்துள்ளார்களென்றும் கூறினுர்.

## "தமிழ் மக்கள் பிரச்னைதீர ம.வி.மு.ஆட்சி ஏறவேண்டும்"

[கிளிநொச்சி]

'தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டுமானுல் மக்கள் விடுதலைமுன்னணி ஆட்சிபீடமேறவேண்டும்' என்று இராமநாதபுரம் சமபுக்குளத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மக்கள் விடுதலைமுன்னணியின அமைப்பாளரும மத்திய குழு உறுப்பினருமாகிய திரு. பா. கணேசபிள்ளை குறிப்பிட்டார்.

திரு. சி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. கணேசபிள்ளை கூறியதாவது:-

'வடபகுதியில ஊ காவற்றுறைத் தொகுதிமுதல் கிளிநொச்சிவரை எம முன்னணி பலமடைந்துவருகிறது மக்கள் விடுதலை முன்னணி ஒரு இனவாதக் கட்சி அல்ல எமது ஆட்சியின்போது மொழி, மத, இன ரீதியாகஉள்ள இன்றைய அரசியல சட்டமும் நீககப்பட்டுவிடும்'

திரு. எஸ். மதிவாணன், திரு வி. சாமுவேல், திரு.கே. இம்மனுவேல ஆகியோரும் உரையாற்றினுர்கள். (க)

## தேர்தல் ஆணையாளரின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நியாயம் இருக்கவே செய்கிறது. இந்த நாட்டின் பாராளுமன்ற சரித்திரத்தில் கடைசியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலில் தான் ஐ.தே. கட்சியும் அதன் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் தொகுதிகள் தோறும் இந்நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு சர்வாதிகாரமும் அடக்குமுறையும் ஒளிக்கப்படவேண்டுமானுல் முதலில் மார்க்ஸீயவாதிகளைத் தோற்கடிக்கவேண்டும் எனத் தீவிரப் பிரச்சாரம் செய்து மாக்ஸிசக் கட்சித் தலைவர்களை மட்டுமல்ல அக்கட்சியின் சகல வேட்பாளர்களையும் தோற்கடித்தார்கள். இச்சம்பவம் ஐக்கிய தேசியக்கட்சியின் இலட்சியமான ஜனநாயக சோசலிசத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே கருதவேண்டும்.

இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் இலட்சியமான சோஷலிச கொள்கையை அடிப்படையாக வைத்து முற்றிலும் ஜனநாயகத்தையே கொள்கையாகக் கொண்ட மறைந்த தலைவர் எஸ்.டபிள்யூ ஆர்.டி. பண்டாரநாயக்காவின் அறிவாற்றலால் உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவுகளினுலும், பிணக்குகளினுலும் நாட்டு மக்களால் சென்ற தேர்தலில் முற்ருகவே ஒதுக்கப்பட்ட மார்ஸிஸத்தலைவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றும்இந்நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிஉன்னதமான பதவியை அடையத் திட்டமிட்டிருக்கின்றனர். ஆனல் தேர்தல்நியமனத்திற்கு முன்பே அவர்களின் தோல்வியை நிர்ணயிக்கும் தேர்தல் ஆணையாளரின் தீர்ப்பு வெளி வந்துவிட்டது.

ஜனநாயக சோசலிசத்தில் நம்பிக்கை கொண்டிருக்கும் வாக்காளர்கள் தேர்தல்ஆணையாளரின் நீதியான தீர்ப்பை ஆதரிப்பதில் வியப்பில்லை. காரணம் ஐ தே கட்சியை எதிர்க்கத் தகுதியும் ஆற்றலும் உள்ள ஒரேயொரு அரசியல் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிதான இக்கட்சியும் அழிந்துவிட்டால் நாட்டில்ஜனநாயகமும்அழிந்துவிடும் எனவே அமெரிக்கா, இங்கிலாந்து தேசங்களில் இருக்கும் குடியரசுக்கட்சி, தொழிற்கட்சி இவைகளைப் போன்று பலமான ஒரு கட்சியாக இயங்க ஜனநாயகசோஷலிசத்தை இந்நாட்டில் கட்டியெழுப்ப ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரு அணிகளும் ஒன்றுபடவேண்டுமென இறைவனைப்பிரார்த்திப்போமாக.

எம்.ஸி.எம். பரீத்,
யாழ்ப்பாணம்.

## தெரிவு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விருத்திசெய்யஅளவுக்குமிஞ்சி கவனம் செலுத்துவதும், பணம் செலவழிப்பதும் பனம் பொருள் அபிவிருத்தியை ஏற்படுத்துமா என்று கேட்கத் தூண்டுகிறது. கடந்த நான்கு வருடமாக ப. பொ. அ. சபை நான்கு தலைவர்களின்கீழும், இரு அமைச்சுகளின் கீழும் ஆற்றிவந்த அபிவிருத்திகளை ஆராய்ந்து பார்த்தால்-சபைக்கு ஒரு ஐந்தாண்டுதிட்டமாவது இருந்தால் தொடர்ச்சியான அபிவிருத்திகள் ஏற்படக்கூடும் எனத் தோன்றுகின்றது.

இதன் காரணமாகவே 'வருங்காலத்திலாது திட்டமான சில நடவடிக்கைகளை பிரதேச அபிவிருத்தி அமைச்சு பனம் பொருள் அபிவிருத்திக்காக எடுக்கவேண்டுமென மக்கள் விரும்புகிருர்கள்' எனக் கொழும்புப் பத்திரிகை ஒன்று ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

ப. பொ. அ. சபைக்கு 'சிவசுப்பிரமணியம் குழு' முக்கியமான அபிவிருத்திகளை சிபார்சு செய்து தமது அறிக்கையில் 10-3-72ல்] தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையிலுள்ள சிபார்சின்படியே17-8-78ல் ப. பொ. அ. சபை பெருந்தோட்ட அமைச்சினுல் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆ. துரைரத்தினம்

## கண்டனம் அல்ல பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"தாய்ச்சங்கம் மீது கண்டனம்" என்ற தலைப்பில் கடந்த 8ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையின் 7ம் பக்கம் வெளிவந்த செய்த குறித்து அகில இலங்கைத் தபால் தந்தி ஊழியர் சங்க உப- தலைவரும் யாழ். கிளை செயலாளருமான திரு. அபோசேவ் பின்வருமாறு எழுதுகிருர்.

அகில இலங்கை தபால் தந்தி ஊழியர் சங்கத்தினர், தம் சங்க உதவித் தலைவர் என்ற கையில் நானும் பொது செயலாளர் ஆர். ஏ. பேரேரா அவர்களும் 5 9 82ல் நடந்த வவுனியா கிளைச்கூட்டத்தில் எந்தக்கட்டத்திலும் எந்த உறுப்பினரும் தாய் சங்கத்தின் மீது கண்டனம் தெரிவிக்கவில்லை, மாருக சிங்களத் தகமையில் இருந்து தமிழ் ஊழியர்ளுக்கு நிவாரணம் பெற்றுத்தந்ததையிட்டு பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

## இஸ்ரேல் தாக்குதல் 30 பேர் பலி!

பெய்ருட், செப். 13

கிழக்கு லெபனுனிலுள்ள பெக்கா பள்ளத்தாககின் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்று தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதலின் போது 30 பேர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

# "பரந்தன் தொழிலாளர் வெற்றி நாட்டின்சகல தொழிலாளர் வெற்றி"

-- பாலாதம்பு

(கிளிநொச்சி

"பரந்தன் ரசாயனத் தொழிலாளரின் வெற்றி இந்த நாட்டின் சகல தொழிலாளரும் பெற்ற வெற்றியாகும்" என்று கிளிநொச்சி றெட்றிக்கா திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற பரந்தன் தொழிலாளர் வேலைநிறுத்தம் முடிவிற்கு வந்தது தொடர்பான பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இலங்கை வர்த்தக ஊழியர்சங்கப் பொதுச்செயலாளர் திரு. பாலாதம்பு குறிப்பிட்டார். திரு கே. ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாலாதம்பு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"கடந்த ஒன்பது மாதங்களாக உருக்குப்போன்ற ஐக்கியத்துடனும் உறுதியான நெஞ்சுடனும் இந்தத் தொழிலாளர்கள் போராடி அந்தப் போராட்டத்தில் வெற்றியும் கண்டுள்ளனர் இது ஒரு வரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும் அதுமட்டுமன்றி தொழிலாளரின் ஒன்றுபட்ட ஐக்கியத்தின் மூலம் எந்த ஒரு சாதனையையும் நாம் நிலைநாட்ட முடியும் என்பதனையும் இது எடுத்துக்காட்டுகிறது

"பரந்தன் தொழிலாளர்கள் தமது போராட்டத்தை நடத்தும்போது இன, மொழி, மதரீதியாகச் சிந்திக்கவில்லை. இந்தத்தொழிலாளர் வெற்றிக்காகச் சிங்களமொழி பேசுகின்ற தொழிலாளர்களும் பெரிதும் உதவியுள்ளதையும் நாம் மறந்துவிடமுடியாது. இன, மொழி மத ரீதியாகத் தொழிலாளர்களைக் கூறுபோட முனைவதை நாம் என்றும் அனுமதிக்கப்போவதில்லை எந்த ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கும்போது அந்தப்போராட்டம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை ஏற்படவேண்டும். அப்போதுதான் அந்தப் போராட்டம் வெற்றிபெறும்.

தொழிற்சங்கப் பிரமுகர்கள் திரு. எஸ். பி. தகா, திரு. டி. ஏ நந்தசேன, திரு. வேணல் விக்கிரமசிங்க உட்பட பலர் உரையாற்றினுர்கள். பரந்தன் தொழிலாளர்கள் சார்பில் தொழிர்சங்கப் பிரதிநிதி திரு. வேலாயுதம் நன்றியுரை கூறினுர். (அ)

# "குழந்தைகள் போஷாக்கில் தாய்மார்கவனம் வேண்டும்"

வேலணை

"பிள்ளைகளுக்கு நோய்வராமல் பாதுகாத்துக்கொள்வது தாய்மார்களின் கடமைகளில் மிகவும் முக்கியமான தொன்ருகும்" என்றுவேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரசார இயக்கக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய மருத்துவ தாதிசெல்வி பாலாம்பிகை கூறினுர்.

வேலணை கிழக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி பத்மாவதி திருஞானம் தலைமையில் நடைபெறற இக்கருத்தரங்கில் செல்வி பாலாம்பிகை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தாயின் வயிற்றில் ஒருகரு உற்பத்தியாகி 42 நாட்களின் பின்தான் உயிர் உண்டாகின்றது. இந்தவேளையில் கருவுற்று இருக்கும் தாய்மார்கள் போஷாக்கு உள்ள உணவுகளையே உண்ணவேண்டும். இல்லையேல் பிறக்கும் குழந்தைகள் நிறைகுறைந்த. போஷக்குக்குறைந்த, வளர்ச்சியற்ற குழந்தைகளாகப் பிறக்கின்றன.

'ஒருபிள்ளையின்கண்பார்வை குறைவதற்கு முக்கியம் உயிர்ச்சத்து ஏ' இல்லாதமையே காரணம். உயிர்ச்சத்து 'ஏ' மிகவும் மலிவாகக் கிடைக்கக்கூடிய பூசினிக்காயில் நன்ருக இருக்கின்றது. இதைத்தாய்மார்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்தால் வருத்தம்வந்துவிடும் என அஞ்சுகிருர்கள். பிள்ளைகளின் எலும்பு வளர்ச்சிக்கு கல்சியம்தான் மிகமுக்கியமாகின்றது. இந்தக் கல்சியம் குறிப்பாகச் சிறுமீன்களில் இருக்கின்றது. இச்சிறுமீன்களை நன்ருகச் சமைத்து முள்ளைநீக்கி கொடுத்துவருவது நலம். இறைச்சியிலும் பார்க்க சோயா அவரையில் 40வீதமான புரதம் இருக்கின்றது. இதைக் குழந்தைகளுக்கு ஏற்ற உணவாக்கிக்கொடுக்கலாம்.

தாய்மார்கள் இடைவிடாது தொடர்ந்து பிள்ளைகளைப்பெறுவதினுலும் தாய்மாருக்கும் பிள்ளைகளுக்கும் போஷாக்குக் குறைவு ஏற்படுகிறது"

## பிரியாவிடை

(புங்குடுதீவு)

"ஒவ்வொரு ஊழியரும் தொண்டு மனப்பான்மையுடன் சேவையாற்ற வேண்டும். எதற்கு அவர்கள் தேசிய உணர்வு நிரம்பப் பெற்றவர்களாக விளங்கவேண்டும்" என விற்பனைத் திணைக்கள தமிழ் ஊழியர் சங்க உப தலைவர் திரு சு த இரவிகுமாரன் திணைக்கள வேலணை விற்பனை நிலையப் பொறுப்பதிகாரி திரு கே அருமைநாதன் இடமாற்றலாகிச் செல்வதையிட்டு ஊர்காவற்றுறைத் தொகுதி விற்பனைத் திணைக்கள ஊழியர்களினுல் நடாத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

செல்வி இ. ஜெகதீஸ்வரி பேசுகையில் இம்மக்கள் கடைபொறுப்பதிகாரி குறுகியகாலத்தினுள் சிறந்த சேவையாற்றி ஊழியர்களதும், இப்பகுதி மக்களதும் நன்மதிப்பைப் பெற்ருர் என்ருர். திரு. த நித்தியானந்தன், செல்வி எஸ்.எம் அகிலேஸ்வரி, செல்வி இ. சிற்றம்பலம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (அ)

## அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூட அடிக்கல் நாட்டுவிழா வித்தியாலய அதிபர் பண்டிதர் த மார்க்கண்டு தலைமையில் நடைபெற்றது.

மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம் அடிக்கல்லை நாட்டினுர். இவ் விழாவில் முதலியார் திரு வை. மகேசன், வண பிதா ஜெயசிங்கம் ஆகியோரும் பங்குகொண்டனர். (அ)

## வட்டாரக் கல்வி அதிகாரியாக பதவிஉயர்வு

(வேலணை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு சுப்பிரமணியம் இரத்தினராசா இம்மாதம் முதல் நாவலப்பிட்டிக்கு வட்டாரக் கல்வி அதிகாரியாகக் பதவீஉயர்வு பெற்றுசென்றுள்ளார்.

இவர் வேலணை மத்திய மகாவித்தியாலயம், யாழ்ப்பாணக்கல்லூரி, வைத்தீஸ்வர வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவராவார். (அ

# இன்றைய பலன்

ஆவணி மாதம் 29-ம் திகதி

செவ்வாய்க்கிழமை

(14—9—82)

மேடம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். உரிமையும் கிடைக்கும். இன்பமான சூழ்நிலை தென்படும், பெற்றேர்களின் ஆதரவும் கிடைக்கும்,

இடபம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது நீண்டநாள் சடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

மிதுனம்: வாழ்க்கையில் புதிரான நிலைதென்படும். எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும். சிநேகித வழியால் கவலை தோன்றக்கூடும் மனத்திடம் வேண்டும்.

கடகம்: கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம், எதிலும் ஏமாற்றம் தென்படும். அரசபயத்துக்கும் இடமுண்டு.

சிங்கம்: குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். உறவினர் ஒருவரின் வருகை உற்சாகத்தை அளிக்கும். எதையும் அலசி ஆராய விரும்புவீர்கள்.

கன்னி: திட்டமிட்டுச்செயல் படவிரும்புவீர்கள். எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. நண்பர் ஒருவர் உமது நலனை கெடுப்பதற்கும் முனைவர்.

துலாம்: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும். தாயின் ஆதரவும்தாராளமாகக்கிடைக்கும். முயற்சி செய்தால் முன்னேற்றமும் உண்டு.

விருச்சிகம்: கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள். இனசனகொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு பிள்ளைகளின் செல்வாக்கும் வளரும்.

தனு: தன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கும் இடமுண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும், பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

மகரம்: குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். பெரியவர்களின் உதவி தாராளமாகக் கிடைக்கும் பொருள் வருவாயில் புதிய திருப்பம் ஏற்படும்.

கும்பம்: போட்டி விவகாரங்களில் பணம் விரயமாகும். ஆணவப் போக்கினுல் சந்தர்ப்பம் நழுவப்படலாம். எதிரிகள் மறைமுகத் தாக்குதல்களையும் நடத்துவர்.

மீனம்: குறிக்கோளில்இன்று வெற்றி கிடைக்கும். இலட்சியவாதிகள் போற்றப்படுவார்கள். பரந்த மனப்பான்மையுடன் செயலாற்றவும் விரும்புவீர்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இயந்திரப்படகு உரிமையாளர் மீது நடவடிக்கை

(மன்னுர்)

மன்னுர் மாவட்டத்தில் காப்புறுதி உத்தரவுப் பத்திரம் பெறப்படாத மீன்பிடி இயந்திரப்படகுகளைக் கண்டுபிடித்து அவற்றின் உரிமையளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை மன்னுர் மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க அதிகாரி திரு ஏ. ஏ குலதுங்கா மேற்கொண்டு வருகிருர்.

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7-ம ஆண்டு மிருதங்கம் நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். மிருதங்கம் ஐந்தாம் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

## மிருதங்கம் ஐந்தாம் பகுதி

### நுானசித்தி

மிருதங்கம், பாட்டு: இராசரத்தினம் அரவிந்தன், செல்லத்துரை சிவகாந்தன், அந்தனி விஜேய்திரா, சின்னராசா காண்டீபன், சேனுதிராசா ஆனந்தராசா, கந்தையா ஜெயதாசன்.

மிருதங்கம்; கணேஸ்வாமி சுதாகன், சாமிநாதன் வாகீசன், செல்லையா அருட்செல்வன், அந்தோனிப்பிள்ளை ரைற்றஸ் பாரதிராஜ், சண்முகலிங்கம் குருபரன், சாந்தா கிறிஸ்ரீன் சூசைப்பிள்ளை, நடராஜக்குருக்கள் ஸ்ரீகாந்தன், கந்தசாமி கருனேந்திரன்.

## ஆசிரியர் பகுதி இரண்டாம்பிரிவு

மிருதங்கம், பாட்டு: சதாசிவஐயர் பாலச்சந்திரன், முத்துக்குமாரு சிவராஜா,

### சாதாரண சித்தி

மிருதங்கம், பாட்டு: இராமலிங்கம் அருணகிரிவாசன்.

### நுானசித்தி

மிருதங்கம், பாட்டு: கந்தையா சத்தியநாதன்.

## நடனம் – பரதம்

### கொழும்பு முதலாம் பகுதி முதலாம் பிரிவு

பரதம்: சிவநந்தினி மாணிக்கவாசகம், சுபாந்தி விஜயநாயகம், அனுஜா ஸ்ரீபரமேஸ்வரன், சிவானந்தி சிவானந்தம், கலைச்செல்வி செல்வராஜா, உமையாள் விஜயரட்ணம், அனுராதா இராஜரட்ணம், சாருமதி சிறீனிவாசன், யாமினி இராமசாமி, நிஷ்சாந்தி சற்குணநாதன், சித்திரகலா நடராஜா, ஜசிந்தா பத்மதேவி ஸ்ரீபத்மநாதன், சுபோதினி வெள்ளச்சாமி, சுசிலா மகாதேவா, கார்த்திகா வாசுகி பரமசாமி, சின்னத்தம்பி சுஜீவன், தர்யாயினி சூத்திர மோகனலால்.

(7ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்ட பிரதேச சபை சங்கங்களின் தலைவர்

(சாவகச்சேரி)

கைதடி தெற்கு கிராமோதய சபைத் தலைவரும், சாவகச்சேரி பிரதேச அபிவிருத்தி சபைத் தலைவருமான திரு. கா. வே. முத்துக்குமாரசுவாமி யாழ். மாவட்ட பிரதேச சபைச் சங்கங்களின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தெரிவு நடைபெற்றது.

செயலாளராக கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் திரு. என். பாஸ்கரனும், நிர்வாக உறுப்பினராக யாழ். பிரதேச சபைத் தலைவர் எஸ். தியாகராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (க)

## நெல்லியடிவாசகர் வட்டம் முன்மாதிரி

(கரவெட்டி

யாழ்ப்பாணம் மாவட்டஅபிவிருத்தி சபை நெல்லியடி உப அலுவலகப் பொது நூல் நிலையத் தளவாடங்களில் குடிகொண்டிருந்த மூட்டைப்பூச்சிகளை வாசகர்கள் ஒழித்துக் கட்டினர்.

நீண்ட நாட்களாக இருந்து வந்த இம் மூட்டைப் பூச்சித் தொல்லைபற்றி வாசகர்கள் நெல்லியடி உபஅலுவலத்திடம் சுட்டிக்காட்டி இத் தொல்லையை நீக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்,

இது சம்பந்தமாக நெல்லியடி உப அலுவலகம் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளாததினுல் நெல்லியடி வாசகர் வட்டத்தின் தலைவர் திரு, சிவதாசலிங்கத்தின் முயற்சியினுல் கச்சாய் சற்குணம் தலைமையில் நூல்நிலையத் தளவாடங்களில் குடிகொண்டிருந்த மூட்டைப் பூச்சிகளுக்கு கிருமிநாசினி தெளிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன. (அ)

## நல்லை ஆதீனத்தில் பண்டித வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச, பாலபண்டித,பண்டித இலவச வகுட்புக்கள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் எதிர்வரும் விஜயதசமி 27 ம் திகதி காலை ஆரம்பிக்கப்படும்.

## வீட்டைக் கொளுத்தினுராம் ஆள் றிமாண்டில்

(ஊர்காவற்றுறை)

வேலணையைச் சேர்ந்த கருணனந்தசிவம் என்பரின் வீட்டைக்கொளுத்தி முப்பதினுயிரம் ரூபா சேதம் விளைவித்ததாக கைலாயநாதன் என்பவர் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி டணித்தார்.

இதுசம்பந்தமான வழக்குத் தாக்கலான போது முறைப்பாட்டுக்காரரின் சார்பில ஊர்காவற்றுறைப் பொலிசாரின் உதவியுடனும், சட்டத்தரணி க. தனராசசிங்கத்தின் அனுசரணையுடனும் ஆஜரான சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் இவ் வழக்கு தண்டனைச் சட்டக்கோவையின்418, 419ம் பிரிவுகளின் கீழ் தாக்கல் செய்யப் பட்டிருப்பதால் 1978ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டத்தின் இரண்டாம் அட்டவணைக்கமைய எதிரி வழக்கு விளங்கித் தீர்ப்பளிக்கும் வரை விளக்கமறியலில் வைக்கப்படவேண்டுமெனக் கோரினுர்.

எதிரியின் சாரபில் சட்டத்தரணி என். சிறிகாந்தா சட்டத்தரணி டீ. இராயப்டவின் அனுசரணையுடன் ஆஜரானுர்.

எதிரிய்ய தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 27ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (அ)

## 4 நாவல்களையும்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யுள்ள லின்டி சாம்பலின் மீதான வழக்கு, இச்சம்பவம்பற்றிய நான்கு நாவல்களையும், இரு திரைப்படக் கதைகளையும் வெளிவரச் செய்துள்ளது. [கி]

## தொண்டர்படை பயிற்சி வகுப்பு

(துணுக்காய்)

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள துணுக்காய், யோகபுரம், புதுவெட்டுவான், உயிலங்குளம், அம்பலப்பெருமாள் ஆகிய 5 கிராமசேவை அலுவலர் பிரிவிலிருந்து தொண்டர்படைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்பு மாங்குளம் பொலிஸ் அலுவலகத்தில் நடைபெற்றது.

நாட்டில் நிலவி வரும் வன்செயல்களை ஒழிப்பதற்கு நியமிக்கப்பட்ட இத்தொண்டர் படையினர் தமது கிராமங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு இவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன!

இந்தப் பயிற்சி வகுப்பை மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நடத்தினர். (க)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
தனிமரம்

றீகல் Daily 5 Shows
[யாழ். நகர்]
OUTLAW JOSSE WALES
From 15–9–82
MAN FROM HONGKONG

சாந்தி [யாழ். நகர்] 14—15
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி ஆர் ஜெயலலிதா
நீதிக்குத் தலைவணங்கு
(புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

ரியோ தினசரி [யாழ்ப்பாணம்] 10–30, 2–15, 4–45, 7–15, 9–30
DEATH DIAMENTIoN

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராணி (யாழ் நகர்) 10வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்) 13 — TO — 14
10–30 A.m., 2–15, 4–45, 7–00, 9–30
William Shatner in
STAR TREX
(Scope—Coior)

5-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ். நகர்)
வாழ்க்கை என்னும் பாலைவனத்திலே பசுஞ்சோலையாக விளங்கும் 'கீதா'வை, அவளின் தியாக உணர்வினை இன்றே காணத்தவறாதீர்கள்.
பெண்களுக்கோர் திலகமாக, பிறரின் வாழ்க்கை மலர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் துடிக்கும் தெய்வமாக விளங்கும் கீதாவை அவளது வாழ்க்கையின் முடிவினை – கண்ணீர்க் காவியத்தை இன்றே காணத் தவறாதீர்கள்!
பாலைவனச்சோலை
(கலர்)

## கிளிநொச்சிப்பகுதியில் பயங்கரவாதங்களுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

### பொலிஸார் நம்பிக்கை

(கிளிநொச்சி

கிளிநொச்சிப் பகுதியில் பரவலாகக்கொள்ளைகள்கொள்ளை முயற்சிகள் வன்முறைகள், காடைத்தனங்கள் அண்மைக்காலமாக மிகவும் அதிகரித்துள்ளது இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிசார் பெரிதும் முயற்சி எடுத்தபோதும் நாளுக்கு நாள் இவை அதிகரித்தவண்ணமே உள்ளது முருகண்டிக்கொள்ளை, கண்டி வீதி வன்முறைச்சம்பவம், தர்மபுரம் பாழடைந்த கிணற்றில் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான அம்மன் சிலை சண்டுபிடிப்பு, பல பெறுமதியான நீர் இறைக்கும் யந்திரத் திருட்டுக்கள், கரடிப்போக்குச் சந்தியில் கடை ஒன்றில் கோஷ்டிச் சண்டை, கொள்ளைமுயற்சி, 6-ம் வாய்க்காலில் 5 பேர் கொண்ட கோஷ்டியினர் நடத்திய மிகப் பயங்கர வெறியாட்டம், இந்த வெறி பிடித்த கோஷ்டியினர் திருமண வைபவமொன்றில் ஏற்படுத்திய திகில் சம்பவம், அக்கராயனில் இளம்தம்பதியினரைத் துப்பாக்கிமுனையில் பணயம் வைத்து அங்கிருந்த சகல பொருட்களையும் திருடிய கொள்ளையர் இளம்மனைவியின் காதுத்தோட்டையும் விட்டு வைக்காது அபகரித்துச்சென்ற பயங்கரம், எல்லாம் இப்பகுதி மக்களைக் கிலிகொள்ள வைத்துள்ளன. இரவு ஆனதும் என்ன நடக்குமோ என்று அஞ்சியவண்ணம் காலத்தை ஓட்டுகின்றனா இம்மக்கள்.

வடபகுதிப் பயங்கரவாதத்தின் தளம் என நம்பப்படும் கிளிநொச்சிக் காடுகளில் வைத்து இவற்றுக்கெல்லாம் சூத்திரதாரிகளான ஐந்து பேரைத் துப்பாக்கி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் யாழ்ப்பாணம் கிளிநொச்சிப் பொலிசார் இணைந்து கைது செய்துள்ளதைத் தொடர்ந்து வெகு விரைவில் இவற்றுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டப்படும் என்று பொலிசார் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்

## பொதுமக்கள் பிடித்து பொலிசில் ஒப்படைத்தனர்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவக்கிரிக்கிளையில் திருடியதாகச்சந்தேகிக்கப்படும் ஒருவரை அவ்வூர்ப் பொதுமக்கள் பிடித்துச் சுன்னாகம் பொலிசில் ஒப்படைத்தனர்.

நவக்கிரியைச் சேர்ந்த செல்லன் அப்பு (15 வயது) என்றழைக்கப்படும் சிறுவனே பிடிபட்டவராவார்.

மேற்படி கிளைச்சங்கக்கடையின் ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்கிய இச்சிறுவன் ஐயாயிரம் ரூபா பெறுமதியான சவர்க்காரவகைகள், உடுப்பு வகைகள் உட்படப் பல பொருட்களைத் திருடிச்சென்று சிலவற்றைத் தனியார் கடையில் விற்றுவிட்டு மீதியை ஒரு பற்றைமறைவில் வைத்திருந்தாராம்.

நேற்றுமுன்தினம் மறைத்து வைத்த பொருட்களை எடுத்துச் சென்றபோது அப்பகுதி மக்கள் கண்டுபிடித்துச் சுன்னாகம் பொலிசில் ஒப்படைத்துள்ளனர்

விற்கப்பட்ட பொருட்களும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன. [மா–அ]

## துறவு வெள்ளி விழா

[கரவெட்டி]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருட்செல்வி எம். எலிசபத் தமது துறவற வாழ்வின் வெள்ளி விழாவை இம் மாதம் 15 ம் திகதி கொண்டாடவுள்ளார்.

இவ்விழாவை ஒட்டி அன்றய தினம் யாழ். அடைக்கல நாயகி மாதா தேவாலயத்தில் திருப்பலிப்பூசையும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (அ)

## பரலோக மாதா தினம்

(கரவெட்டி)

கரவெட்டி பரலோகமாதா தேவாலயத்தில் தேவமாதாவின் பிறந்ததினம் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது

கடந்த புதன் கிழமை நடைபெற்ற இக் கொண்டாட்டத்தின் போது தேவாலயத்தில் செபமாலைத் தியானம் ஓதப்பட்டதுடன் அன்னதானமும் வழங்கப்பட்டது. (அ)

## வட இலங்கை...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

### இரண்டாம்பிரிவு

பரதம்: எஸ். ஏ. மரியதாஸ், பிரிய கௌரி ரீ, சுமித்ரா சிவலிங்கப்பிள்ளை, மீரா குருகுலசிங்கம், அனுராதா அம்பலவாணர், ஜெயந்தி சுப்பிரமணியம், புனிதவாணி சிவகுருநாதன், சிவயோகினி செல்வராஜா, பிருந்தா ரெத்தினசிங்கம் ராஜலக்சுமி நடராஜா, அன்ரொனெற் பிறிசிலா பர்ணாந்து, சுபாஷினி அமிர்தலிங்கம், சுவிதினி சோமசுந்தரம், துஷித்தா அரியரட்ணராஜா.

### சாதாரணசித்தி

பரதம்: சியாமளா மகாதேவா, உபநிஷா பப்ரீஸ்ட், யசோதா இரத்தினசிங்கம், பவானி கனகரா நிர்மலா வெள்ளியம்பலம், ஞானகலா பப்ரீஸ்ட், கல்யாணி குலேந்திரன், உதயசந்திரிகா மயில்வாகனம், தேவரஜனி ராஜேந்திரன், யாழினி இரட்ணஜோதி மங்களா சிவரத்தினம் பிரதிபா இராசசேகரம், ஷர்மிளா தர்மராசா, பவானி தில்லைநாதன், மீனக்குமாரி தியாகராசா, தர்ஷினி சண்முகலிங்கம், சாதனா விஜயரட்ணம், நயன்தாரா தில்லைநாயகம், கீதா இராமகிருஷ்ண சுஜிதா சிவராஜா, ரஜனி குலரத்தினம், கீதா சண்முகலிங்கம், மைதினி நவரத்தினராஜா, கோமதி V, சர்மா, ராதிகா பாலகிங்கம், சுபோதினி நடராசா சுதர்ஷினி இராமச்சந்திரன், தரங்கினி பத்மசீலன், சுகந்தினி நடராசா, கிருஷாந்தினி மகாலிங்கம், நித்தியா துரைசிங்கம், சிவமலர் சிவசம்பு.

### கண்டி

### முதலாம்பகுதி

### முதலாம் பிரிவு

பரதம்: சசிகலா சுப்பிரமணியம்.

### இரண்டாம்பிரிவு

பரதம்: சிவவிமலர் செபஸ்டியன்,

### திருகோணமலை

### முதலாம்பகுதி

### முதலாம்பிரிவு

பரதம்: கோபாலகிருஷ்ணன் சசீந்திரன், குமுதா கோபாலகிருஷ்ணன், சுதாஹரி பாஸ்கரன், கேதீஸ்வரி அருணசலம்துரை, அமுதமலர் கோபாலகிருஷ்ணன்.

### இரண்டாம்பிரிவு

பரதம்: தமயந்தி சடகோபன், சுபாஷீனி நவரட்னம்.

### சாதாரணசித்தி

பரதம்; ஜெயச்செல்வி செல்வரத்தினம், லக்ஷ்மி விஸ்வமங்களம், ஜனனி ஜெயதேவா, யாமினிதேவி புஷ்பராஜா.

### மட்டக்களப்பு

### முதலாம் பகுதி

### முதலாம் பிரிவு

பரதம்: சங்கீதா நாகராஜா, சம்யுத்தா கருணாகரன், நர்மதா இராஜநாயகம், பவானி தியாகராசா, சிறுணி ஜீவராஜமுதலியார், கலாயினி அரியநாயகம், கோகிலப்பிரியா கனகசபை, கிருஷ்ணகுமாரி தம்பிராசா, யூடித் நளினி வணசிங்க, பானுமதி பாலசிங்கம், சாமேன் கிறிஷார்த்தி ரெட்ணராஜா, குவின்ரா போபினி பொன்னுத்துரை, மேகலா நவரெத்தினம்,

### சாதாரணசித்தி

பரதம்: மதனவேணி சீனித்தம்பி, ஸ்ரீவள்ளி ஷர்மிலா இரகுநாதன், பிரிதிவா யோகநாதன், கலைவாணி பாலயோகஜெயம்.

### யாழ்ப்பாணம்

### முதலாம் பகுதி

### முதலாம் பிரிவு

பரதம்: ரதிகுமாரி மகாதேவன், கிருணரூபினி சேனாதிராஜா, யசோதா சோமசுந்தரம், யோகநந்தினி நாகராஜா, யாமினி யோகானந்தம். நந்தினி யோகானந்தம், லலிதாஞ்சனா கனகேந்திரம். ஷர்மிலா லிங்கம், ஜோய்சி ஹென்றி, ரமோனா செல்வசிங்கம், அனுஜா சுந்தரலிங்கம்.

(தொடரும்)

## பொலிசாரைக் கண்டு ஓடியவர் தடக்கிவிழுந்து மரணம்!

(மன்னார்)

பொலிசாரைக் கண்டு பயத்தில் ஓடிய கசிப்பு வியாபாரி ஒருவர் கால்தடக்கி விழுந்து மரணமானார். மன்னார் நகரில் இச் சம்பவம் இடம்பெற்றது. மரணமானவரின் பெயர் தயானந்த. வயது 34.

மரணமானவர் கசிப்பு வியாபாரி எனவும், தலைமன்னார் பியர் பகுதிக்கு வேறுவேலையாகச் சென்ற பொலிசாரைக் கண்ட இவர் பயத்தில் ஓடும்போது கால்தடக்கி விழுந்தார் எனவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலத்தை பிரேத பரிசோதனை செய்தபோது மரணத்திற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியாததால் உள் உறுப்புக்கள் இரசாயன பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பாக மரண விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனாப் எம். பி எம். ஜப்பார் தமது தீர்ப்பின்போது இம் மரணம் தொடர்பாகப் பகிரங்க தீர்ப்பளிக்கப்படுமெனவும், இச்சம்பவம் தொடர்பாகத் தலைமன்னார் பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்தவேண்டும் எனவும் தெரிவித்தார். (அ)

## கூட்டணிக்கிளை நிர்வாகிகள்

(புங்குடுதீவு]

தமிழர் விடுதலைக் கூட்டணி புங்குடுதீவு மத்தி கிளையின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் கிளையின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: நா. தருமலிங்கம், உப-தலைவர்: செ. தனபாலசிங்கம், செயலாளர்: நாக. சாந்தலிங்கம், பொருளாளர்: நா. கருணானந்தசிவம். உறுப்பினர்கள் 21 பேர். (அ)

## நன்கொடை

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை தொகுதி கல்விவள நிலையத்திற்கு இந்தியபிரதித் தூதுவர் திரு ஆர். எம். அபியங்கார் திரைப்படக் கருவி ஒன்றை அன்பளிப்பு செய்துள்ளார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடந்த வைபவமொன்றில் இந்த அன்பளிப்பு இடம் பெற்றது.

இதில் எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம், வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ)

# மாவட்டசபை உப அலுவலகங்களுக்கு ஜனவரி முதல் அதிகாரங்கள்

## யாழ். மேலதிக அரசாங்க அதிபர் தகவல்

[கரவெட்டி]

''மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகங்களுக்கு ஜனவரி முதல போதிய அதிகாரங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்மேற்கொண்டு வருகிறது இந்த அதிகாரங்கள் உப அலுவலகங்களுக்குக் கிடைத்ததும் குறைபாடுகள் பல நீங்க இடமுண்டு ''

இவ்வாறு யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி எல். பற்றிக் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபை அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு பற்றிக் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கிராமச் சங்கங்கள் மூலமே கிராம ரீதியாக அபிவிருத்திவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றைவிட வேறு தனிப்பட்டசங்கங்களும்கிராம அபிவிருத்தி, வேறு அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்டு வந்தன. இதை தொடர்ந்துஇன்று கிராமோதயசபைகள், பிரதேச சபை மட்டத்திற்கு உயர்ந்து வந்துள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் கடந்த காலங்களில் இயங்கிவந்தமையினால்தான் இன்று கிராமோதய சபைகள் உருவாகக்கூடியனவாகவும், செயற்படக்கூடியனவாகவும் இருக்கின்றது

''எந்த ஒரு நிறுவனமும் உடனடியாகஉயர்ந்துவளர்ந்துவிடமுடியாது. நாளடைவிலே தான் அது சாத்தியமாகின்றது நாம் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. அதே போலத்தான் கிராமோதய சபைகள், பிரதேசசபைகளுக்கும் போகப்போகத்தான் அதிகாரங்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுவருகிறது.

''கிராமோதய சபைகள் சிரமதானம் போன்றவற்றின் மூலமும், நிதி சேகரிப்பதன் மூலமும் எத்தனையோ அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் இலாகாக்களின் வேலைகளையும் கண்காணிக்கவும்முடியும் இதனால் அபிவிருத்தி வேலைகளைக் கண்காணித்துக்கொள்ள முடியும்.

''அடுத்த ஆண்டு முதல் மாவட்ட அபிவிருத்தி சபை உப அலுவலகங்களுக்கு முன்பு இருந்தது போன்று போதிய அதிகாரங்கள்வழங்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம்மேற்கொண்டு வருகின்றது. இந்த அதிகாரங்கள் உப அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டதும் இப்போது உள்ள கஷ்டங்கள், குறைகள் நீங்கும்'' என்றார்.

பருத்தித்துறை — கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும் இக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபைத் தலைவர் திரு. என். பாஸ்கரன் உட்படப் பலர் கருத்துரை வழங்கினார்கள்.

# ஜனாதிபதி வடபகுதி விஜயம்: டி. ஐ. ஜி. கூட்டிய பாதுகாப்பு மாநாடு

(யாழ்ப்பாணம்

ஜனாதிபதி தேர்தலின்போது வடபகுதியில் எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வடபிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ரி. ராஜகுரு, மகாநாடு ஒன்றை நேற்று நடாத்தினர்.

பிரதிபொலிஸ் மாஅதிபரின் அலுவலகத்தில் நடைபெற்ற இம்மகாநாட்டில் வடபிராந்திய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் உதவிப் பொலிஸ்அதிபர்களும் கலந்து கொண்டனர்,

இம்மாநாட்டில் வாக்களிப்பு நிலையங்களில் பாதுகாப்பளிப்பது ரோந்துநடவடிக்கைகள் மற்றும் ஜனாதிபதி வருகையின் போது எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. (மா)

# தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் விரைவில் புற்றுநோய்சிகிச்சை!

## யந்திர சாதனங்கள் வந்து சேர்ந்தன

[மாவிட்டபுரம்]

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைவளவில்அமைக்கப்படும் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் 'கோபால்ட் யூனிற்' இயந்திர சாதனங்கள் விரைவில் பொருத்தப்படவுள்ளன.

வடபகுதி புற்றுநோயாளர்களின் நலன்கருதி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை வளவில் பல லட்ச ரூபா செலவில் அமைக்கப்படும் புற்றுநோய் சிகிச்சைநிலையத்தில் கீழ்மாடிக் கட்டிட வேலைகள் ஏற்கனவே பூர்த்தியடைந்தபோதும்அங்கு இணைப்பதற்காக 'கோபால்ட் யூனிற், இயந்திரசாதனங்கள் வந்து சேராதிருந்தமையால் இது வருமா, வராதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருந்தது.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் இதுபற்றிச் சுகாதார அமைச்சருக்கும், எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கத்திற்கும், யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு.பி.விஜயக்கோனுக்கும் சு[illegible] டி இவ்வியந்திர சாதனங்களை விரைவில் பெற்றுத் தருமாறு கோரியிருந்தது.

இந்த 'கோபால்ட் யூனிற்' இயந்திரசாதனங்கள் தெல்லிப்பழைக்கு நிச்சயம் கிடைக்குமெனவும், அது விரைவில் அனுப்பப்படுமெனவும் திரு. அமிர்தலிங்கம் சுகாதார அமைச்சருடன தொடர்பு கொண்டபின மேற்படி சங்கத்திற்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து கடந்தவாரம் 'கோபால்ட் யூனிற்' இயந்திர சாதனங்கள் இங்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றைஇணைப்பதற்காகக் கொழும்பிலிருந்து நிபுணர்கள் வரவிருக்கிறார்கள். அவர்கள் வந்ததும் இவ்வியந்திர சாதனங்கள் இணைக்கப்படும்.

வடபகுதிப் புற்று நோயாளர்கள் இதுவரை காலமும் புற்றுநோய் சிகிச்சை மகரகம புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கே செல்ல வேண்டியிருந்தது குறிப்பிடத் தக்கது.

## பனகொடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வசதி, அத்தோடு 'ஷவரில்' மூன்று நாட்களுக்குக் குளிக்கலாம்; தினசரி மாலை நான்கு மணிக்கும், மாலைஆறுமணிக்குமிடையில் ஒரு மணிநேரம் உடற்பயிற்சி செய்ய அனுமதி; சவர்க்காரம் வழங்கப்படும்; பார்சல்கள் அவர்களுக்குமுன்னால் சோதிக்கப்பட்டு,பரிசீலிக்கப்பட்டு வழங்கப்படும்; குடும்பத்தினருடன் கடிதப்போக்குவரத்துக்கு அனுமதி. இளைஞர்களின் இந்தக் கோரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் ரி, குமாரலிங்கம், வி. பாக்கியநாதன் ஆகியோர் இளைஞர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

### அமிரின் அவசரத் தந்தி

'பனகொடை ராணுவ முகாமில் உண்ணாவிரதம் இருந்துவரும் தமிழ் இளைஞர்களின் விஷயத்தில் உடனடியாகத்தலையிட்டு அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிவர்த்திசெய்யுங்கள் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆ. ஜயவர்த்தனவை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளும் அவசரத் தந்தியொன்றை எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளருமான திரு. அ.அமிர்தலிங்கம்நேற்று அனுப்பிவைத்திருந்தார்.

இந்தஇளைஞர்களைசாதாரண சிறைக்கு மாற்றும்படி தாம் ஏற்கனவே விடுத்துள்ளகோரிக்கையை விரைவில் ஆலோசனைக்குஎடுத்து செயல்படுத்தும் படியும் திரு. அமிர்தலிங்கம் தமது தந்தியில் வற்புறுத்தியிருந்தார்.

## தமிழீழம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் விரும்பி இருந்து கடமையாற்றும் தமிழ்பொலிசாரையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்த திரு வாசுதேவநாணயக்கார தென்னிலங்கையில் பிரிந்துபோகும் நிலை ஏற்படாது; துரதிர்ஷ்டவசமாக சிறில்மத்யூ போன்றவர்கள் பதவிக்கு திரும்பவும் வந்தால், நாங்களும் வடபகுதி வரவேண்டியேற்படும்; அப்பொழுது பிரிந்துபோவதற்குப் போராடுவோம்'' என்றார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், இடதுசாரி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் தமிழ் மக்கள் பிரிந்துபோகும் நிலை ஏற்படாது என்றார்.

உரிமைகளை வெள்ளித்தாம்பாளத்தில் வைத்து எவரும் தரமாட்டார்கள். போராடித்தான்பெறவேண்டும் தேர்தலைப்பகிஷ்கரிப்பதால் ஜே. ஆருக்குச் சாதமான நிலையை உருவாக்கிவிடும். ஆதலால் இத்தேர்தலில் மக்கள் அளிக்கப்போகும மூன்றுவாக்குகளையும் ஐக்கியதேசியக்கட்சிக்கெதிராக அதாவதுஇடதுசாரிகளுக்குப் போடுங்கள்'' என்றும் அவர் கேட்டுக்கொண்டார் (மா)

## குட்டிமணிக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

எம்மையும் மீறிக்கொண்டுசிலரால் கடந்த வாரம் இம் முயற்சிகள் பகிரங்கப்படுத்தப்பட்டமை துர்ப்பாக்கியவசமானது.

### மீட்கவேண்டியது நமது கடமை

''சிறையில்இருக்கும் எல்லா இளைஞர்களினதும் பிரச்சினைகள் அரசியல்ரீதியாக பேசித் தீர்ப்பதில் தமிழர் விடுதலைக் கூட்டணி அக்கறை கொண்டுள்ளது அங்ஙனம் தீர்ப்பதில் தமக்குள்ள விருப்பத்தை இந்த இளைஞர்கள் அவர்களின் வழக்குகளில் ஆஜராகிவரும் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம், திரு.கரிகாலன் ஆகியோர் மூலம் எமக்குத் தெரிவித்துள்ளனர். இவர்களை மீட்கவேண்டியது எமது தலையாய கடன். இந்த நிலையில் பக்குவமாக அணுகித்தீர்க்க வேண்டிய பிரச்னையை எமது நிதானமற்ற செயல்கள்மூலம் நாம்சிக்கலாக்கிவிடக்கூடாது.

அதேவேளையில் இந்த இளைஞர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் சித்திரவதைகள் விதிக்கப்பட்ட மரண தண்டனை, படுமோசமான ஏற்பாடுகளைக்கொண்ட பயங்கரவாதத் தடைச்சட்டம் 1971 புரட்சியில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்களுக்கு மன்னிப்பும் எமது இளைஞர்களுக்கு மரண தண்டனையும் வழங்கிய ஓரவஞ்சனையான கொடுமை, இவற்றிற்கெதிரான எமது இனத்தின் எதிர்ப்பைக்காட்ட வேண்டும் எனவும் விரும்புகிறோம். அங்ஙனம் எதிர்ப்பைக் காட்டுவதற்கான ஒரு மாற்றுத்திட்டமாக குட்டிமணியை வட்டுக்கோட்டைத் தொகுதியில் தற்போது காலியாகவுள்ள இடத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கவேண்டும் என இளைஞர்கள் கோரிக்கை ஒன்று விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கையும் எமது பரிசீலனையில் உள்ளது. இக்கோரிக்கைகளின் மீது நாம் நிதானமாக ஆலோசித்து இந்த இளைஞர்களின் நலன்களை மனத்தில்கொண்டு ஒரு முடிவை எடுப்போம் அது வரையில் இக்கோரிக்கைகள் மீது அரசியக் சலசலப்புகாட்டாமல் இருப்பது உள்ளே இருக்கும் இளைஞர்களின் நலனுக்கு நல்லது. (மா)

# இருமாதத்தின்பின் கூடிய மட்டு. அபிவிருத்திசபை

## கூட்டத்தில் காரசாரமான விவாதம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டம் இரு மாத இடைவெளிக்குப் பின்னர் நேற்று சபைத் தலைவர் திரு எஸ் சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கூட்டணி உறுப்பினர்களுக்கு, ஐ தே.கட்சி உறுப்பினர்களுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

இரு தரப்பினரும் எதிரும் புதிருமாக ஒழுங்குப் பிரச்னைகளை முன்வைத்தபோது சபையில் பலத்த வாக்குவாதங்கள் இடம்பெற்று சபையைத் தலைவர் ஒத்திவைக்கவேண்டியநிலை ஏற்பட்டபோதிலும் அவர் அமைதியாகக் கூட்டத்தை நடத்தினர்.

நேற்றைய கூட்டத்தில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு.கே. டபிள்யூ தேவநாயகத்திற்கும் பட்டிருப்பு எம். பி. திரு பி கணேசலிங்கத்திற்கும் இடையே ஒரு கட்டத்தில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அமைச்சர் தேவநாயகம்கூட்டம் முடிவடைந்து வெளியே வந்தபோது ஐ.தே.கட்சிஆதரவாளர்களால் வரவேற்கப்பட்டார். (வெ)


# மின்தறி நெசவாளர் தேவை

எங்கள் மின்தறி நெசவாலைக்கு அனுபவமுள்ள நெசவாளர்கள் தேவை பகுதி நேர வேலை (Shift) அடிப்படையில் பணிபுரிய வேண்டும்.

மின்தறி நெசவு அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

18-9-82 சனிக்கிழமை காலை 9 மணிக்கு சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

## சக்தி ரெக்ஸ்ரைல் மில்

(சீமா சில்க் இன்டஸ்றீஸ் பின்புறம்)

பலாலி றேட், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

4515


# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிராசா பொன்னம்மா

திருமதி. த. பொன்னம்மா காலமாகிவிட்டார். இவர் நல்லூர் பெற்றோல் செட் உரிமையாளர் திரு. த. தம்பிராசாவின் அன்புமனைவியும், பேபி சரோசா, முத்துலிங்கம் லிபியா, இராசலிங்கம் (சிமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை), சண்முகநாதன் (மால் சிறீ — மரவேலை தொழிற்சாலை), இராசதுரை, ஜெகதீஸ்வரன் (கட்டுபெத்தை), புவனேஸ்வரி, பாஸ்கரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், தேவகுருநாதன், சிறீகல்யாணி ஆகியோரின் மாமியாரும், தனசிறீ, செங்கோடன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். பூதவுடல் தகனக்கிரியைக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;— த. தம்பிராசா,

37/1, ஆடியபாத வீதி, நல்லூர்.

4519

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்கத்தில் 1982 செப்டம்பர் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 190236/81
Elanadu — P. O. Box49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.